வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

MARUTHI MONEY EXCHANGE
மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 04.07.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 185 பக்கங்கள் : 12

# செம்மணி படுகொலைகள் பிரிட்டன் ஆழ்ந்த கவலை!

லண்டன், ஜூலை 04

**அரியாலை - சித்துப்பாத்தி மயானத்தில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகள் - செம்மணி படுகொலைகள் தொடர்பில் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளதாக பிரிட்டன் அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

சர்வதேச மேம்பாட்டு குழுவின் தலைவரான சாரா எம். பியின் கேள்விக்கு எழுத்துமூலமாக வெளிவிவகார பணிமனை அமைச்சர் கேத்தரின் வெஸ்ட் அளித்துள்ள பதிலிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், "நல்லிணக்கம் - பொறுப்புக்கூறல் குறித்து விவாதிக்கவும் குறிப்பாக, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான வழக்குகளில் உறுதியான முன்னேற்றத்துக்காக அழுத்தம் கொடுக்கவும் இங்கிலாந்து தொடர்ந்து இலங்கை அரசாங்கத்தை சந்தித்து வருகிறது"

"செம்மணியில் (அரியாலை - சித்துப்பாத்தி) சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி குறித்து இங்கிலாந்து அரசாங்கம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. மனித உரிமைகள் மீறலுக்கான பொறுப்புக்கூறலை ஆதரிப்பதில் நாங்கள் தொடர்ந்தும் உறுதியாக உள்ளோம்.", என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், தனது இலங்கை பயணம் குறித்தும் குறிப்பிட்டுள்ள வெஸ்ட், "ஜனவரி மாதம் நான் இலங்கைக்கு சென்று பிரதமர், வெளிவிவகார அமைச்சர், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் வடக்கு மாகாணத்தை சேர்ந்த அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பலரை சந்தித்துக் கலந்துரையாடினேன். கொழும்பிலுள்ள உயர்ஸ்தானிகராலயத்திலுள்ள பிரிட்டன் அதிகாரிகள் நாடு முழுவதும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுடன் நெருங்கிய

11

## செம்மணி மனித புதைகுழி; சர்வதேச விசாரணை தேவை

பிரிட்டனை தலைமை தாங்கவும் அழைப்பு

லண்டன், ஜூலை 04

செம்மணி - அரியாலை மனிதப் புதைகுழிகள் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு இங்கிலாந்து அரசாங்கம் தலைமை தாங்க வேண்டும் என்று பிரிட்டனின் பாராளுமன்ற உறுப்பினர் டேம் சியோபைன் மெக்டோனா அழைப்பு விடுத்துள்ளார்.

பிரிட்டனின் தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி பாராளுமன்றக் குழுவின் தலைவரான

11

## தமிழ் மாணவி மரணம்; நீதி கோரி நேற்று பேரணி!

கொழும்பு, ஜூலை 04

ஆசிரியரின் பாலியல் துன்புறுத்தல் மற்றும் அவமானப்படுத்தலால் தவறான முடிவெடுத்து உயிரிழந்த கொழும்பு தமிழ் மாணவியின் மரணத்துக்கு நீதி கோரி நேற்று அமைதிவழி பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு - கொம்பனி தெரு பொலிஸ் நிலையம் முன்பாக நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தப் பேரணி, "சிறுவர்

11

## காரைநகர் விபத்தில் இளைஞர் பலி!

- பு.கஜிந்தன் -


யாழ்., ஜூலை 04

மோட்டார் சைக்கிளும் லாண்ட்மாஸ்டரும் மோதிய விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

காரைநகர் பாலத்துக்கு அண்மையாக இடம்பெற்ற இந்த விபத்தில் காரைநகர் - களபூமியை சேர்ந்த சங்கரப்பிள்ளை பவன்ராஜ் (வயது -22) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞர், கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் சென்ற

11



படம் - ஐ. சிவசாந்தன்

### அரியாலை மனித புதைகுழி:
## மேலும் இரண்டு சிறுவர்களின் எலும்புக்கூடுகள் அடையாளம்!

- 4 மண்டையோடுகளும் கண்டறிவு
- ஆடை ஒன்றும் வெளிப்பட்டுள்ளது

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை

அரியாலையில் அகழப்படும் மனிதப் புதைகுழியில் நேற்றைய தினம் சிறாரின் இரு சிறுவர்களின் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. அத்துடன், 4 மண்டையோடுகளும் கண்டறியப்பட்டுள்ளன.

அரியாலை, சித்துப்பாத்தி (செம்மணி அருகே) இந்து மயானத்தில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியில் இரண்டாவது கட்டமாக 8ஆவது

11

## துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் ஒருவர் மரணம், இருவர் காயம்!

கொழும்பு, ஜூலை 04

தென்னிலங்கையில் நேற்று இடம்பெற்ற வெவ்வேறு துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் ஒருவர் உயிரிழந்தார். இருவர் படுகாயமடைந்தனர்.

கம்பஹா மாவட்டத்திலேயே நேற்றைய தினம் இரு வேறு இடங்களில் இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன.

கந்தானையில் கார் ஒன்றின்மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

இதில், காயமடைந்த இருவரும் உடனடியாக ராகம ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ஆனால், ஒருவர் உயிரிழந்தார். காயமடைந்தவர் மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவின் தனிப்பட்ட செயலாளராக பணியாற்றிய சமீரா மனஹார என்பவராவார்.

இதேசமயம், நீர்கொழும்பில் பொலிஸாரின் உத்தரவை மீறிச் சென்ற மோட்டார் சைக்கிள்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார். போதைப்பொருள் கடத்தியவர் மீதே துப்பாக்கிச்சூடு நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.



## ஊடகவியலாளர் கிருஷ்ணகுமார் காலமானார்!

கிளிநொச்சி,ஜூலை 04

கிளிநொச்சியின் மூத்த ஊடகவியலாளர்களில் ஒருவரான நடராஜா கிருஷ்ணகுமார் (வயது 52) நேற்று வியாழக்கிழமை காலமானார்.

1999ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை புலிகளின் குரல்,

11

## மது அருந்திய இளைஞர் திடீர் மரணம்!

யாழ்., ஜூலை 04

நண்பர்களுடன் மது அருந்திக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டு உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு சுன்னாகத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் புன்னாலைக்கட்டுவனை சேர்ந்த 27 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மது அருந்திக் கொண்டிருந்த

11

## வருடாந்தம் 800 சிறார் புற்றுநோயால் பாதிப்பு

சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 04

நாட்டில் வருடாந்தம் 33 ஆயிரம் புதிய புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இவர்களில், 800 பேர் சிறுவர்களாவர் என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மஹரகம தேசிய புற்றுநோய் மருத்துவமனைக்கு 5 மாடி கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அங்கு,

11

## சட்டம் ஒழுங்கை அரசு நிலைநாட்ட வேண்டும்

எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, ஜூலை 04

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் எந்த வேலைத்திட்டமோ அல்லது தொலைநோக்கு பார்வையோ இல்லாததோர் அரசாங்கமே இன்று நாட்டில் காணப்படுகின்றது - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ராமஞ்ஞ மகா பீடம் நடத்திய உபசம்பதா நிகழ்வில் பங்கேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நேற்று (நேற்று முன்தினம்) இரவு கல்கிசை கடற்கரையில் சடலமொன்று கரையொதுங்கியது. இன்று (நேற்று) கந்தானையில் நடந்த

11

## "பயங்கரவாத சட்ட நீக்கம் மும்முரம்"

மட்டு., ஜூலை 04

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்கங்கள் பொது மக்களின் நலனிலும் அக்கறை காட்டவேண்டும்!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், ஜூலை 04

தொழிற்சங்கங்கள் தங்கள் அங்கத்தவர்களின் நலனில் செலுத்தும் அக்கறையின் அளவில் சேவைகளை நாடும் பொதுமக்களின் நலனிலும் செலுத்தவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

அரச ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கோரினார்.

இதன்போது, ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் வடக்கு மாகாண சுதேச வைத்தியத்துறை திணைக்களத்தில் புதிய பதவிநிலை ஆளணி உருவாக்கம், வெற்றிடமாகவுள்ள பதவிநிலைகள் தொடர்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அத்துடன் சிற்றூழியர்களுக்கான பதவி உயர்வுகள், சிற்றூழியர் வெற்றிடங்களை நிரப்புமாறும் கோரினர்.

மேலும், வடக்கு மாகாணத்தில் சுதேச வைத்தியத்துறையின் கீழ் தாதியர் ஒருவர்கூட இது வரை நியமிக்கப்படவில்லை என்ற விடயமும் ஆளுநருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இடமாற்றங்கள் தொடர்பிலும், நியமனம் பெறுகின்ற வைத்தியர்களுக்கான நிலையங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. அத்துடன் வடக்கு மாகாணத்தில் சுதேச வைத்தியத்துறை திணைக்களத்தின் கீழ் மாகாண மட்டத்தில் பணியாற்றும் வைத்தியர்கள் கைவிரல் இயந்திரத்தில் வரவு பதிவு செய்வதில்லை எனவும் ஆனால், உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பணியாற்றும் ஊழியர்கள் கைவிரல் இயந்திரத்தில் வரவு பதிவு செய்ய வேண்டும் என நிர்பந்திக்கப்படுவதாகவும் சங்கத்தால் சுட்டிக்காட்டப்பட்டது.

இவை தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு ஆளுநர் பணிப்புரை வழங்கினார். (ஐ)



# உணவு பாதுகாப்பு தொடர்பாக ஊடகவியலாளருக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 04

உணவு பாதுகாப்பை வலுப்படுத்துவது தொடர்பில் யாழ். மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் நகரில் விருந்தினர் விடுதி ஒன்றில் நடைபெற்ற இந்த செயலமர்வில் சுகாதார அமைச்சின் பிரதம உணவு மற்றும் பாதுகாப்பு பிரிவின் அதிகாரி சுதர்சன், வடக்கு மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த செயலமர்வு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் இணைந்து ஐரோப்பிய ஒன்றிய குழுவின் நிதியுதவியில் முன்னெடுக்கப்பட்டது. (ஐ-03)

# இரு பெண்களை கத்தியால் குத்தியவர் சடலமாக மீட்பு!



வவுனியா, ஜூலை 04

சேர்ந்து வாழ்ந்த பெண்ணையும் அவரின் தாயாரையும் கத்தியால் குத்தி படுகாயப்படுத்தியவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் வவுனியா - சமயபுரம் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு நடந்துள்ளது. இதில், வசந்தி (வயது 30), இந்திரா (வயது 69) ஆகியோரே படுகாயமடைந்தனர். கிருஷ்ணகுமார் (வயது 45 என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, வேறு பிரதேசங்களை சேர்ந்த உயிரிழந்த நபரும் படுகாயமடைந்த 30 வயது பெண்ணும் வெவ்வேறு திருமணங்களை செய்துள்ளனர். எனினும், இருவரும் கடந்த ஒரு வருடமாக சேர்ந்து வாழ்கின்றனர் என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு வீட்டுக்கு வந்த உயிரிழந்த நபர் தன்னுடன் சேர்ந்து வாழ்ந்த பெண்ணையும் அவரின் தாயாரையும் கத்தியால் குத்தி படுகாயப்படுத்தியுள்ளார். அத்துடன், வீட்டுக்கும் தீ வைத்துள்ளார்.

படுகாயமடைந்த பெண்கள் இருவரும் அயலவர்களால் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், குறித்த குற்றச்செயல்களை செய்தார் என்று கூறப்படும் நபரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டது. அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-10)

# வடக்கு ஆசிரியர் சேவைக்கான ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 04

ஆசிரியர் சேவையின் தரம் 3இற்கு பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை மறு அறிவித்தல் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண பாடசாலைகளில் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலப் பாடங்களில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவை யின் 3ஆம் வகுப்பு 1(அ) தரப் பதவிக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டி பரீட்சைக்கு கடந்த 20ஆம் திகதி விண்ணப்பம் கோரப்பட்டது.

இந்தநிலையில் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலை அடிப்படையாகக் கொண்டு ஆசிரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்குமாறு வடக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைய விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை மறுஅறிவித்தல் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு பதில் செயலாளர் எ. அன்ரன் யோக நாயகம் தெரிவித்துள்ளார். (ஐ)

# கனடாவிலிருந்து வந்த பெண் விபத்தில் மரணம்!

யாழ்ப்பாணம், ஜூலை 04

கனடாவில் இருந்து வந்த யாழ்ப்பாணம் வந்த பெண் ஒருவர் விபத்தில் காயமடைந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

ஏ-9 வீதி மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத் தில் சுமதி இராஜரட்ணம் (வயது 58) என்பவரே உயிரிழந்தவரா வர்.

மிருசுவிலில் தங்கியிருந்த அவர் கடந்த ஜூன் 27ஆம் திகதி பாண் வாங்குவதற்காக சைக்கிளில் கடைக்கு சென்றுள்ளார். அப்போது, பட்டா ரக வாகனம் அவரை மோதியதில். இதில் படுகாயமடைந்த அவர் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வின்சன் அன்ரலா மேற்கொண்டார்.


விபத்து குறித்த விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-05)

# உயிராபத்தை ஏற்படுத்தவல்ல ஆபத்தான மின்விளக்கு கம்பம்!

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 04

வீதி மின்விளக்கு கம்பத்தின் மிக அருகாக உயர் மின்னழுத்த வடம் செல்வதால் உயிராபத்து ஏற்படும் நிலைமை காணப்படுகிறது. எனவே, இது தொடர்பில் மின்சார சபையினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



கொக்குவில் மஞ்சவனபதி முருகன் ஆலயம் முன்பாக உள்ள தெருமின்விளக்கு கம்பம் அருகாகவே இந்த ஆபத்தான நிலைமை உள்ளது. குறித்த மின் வடம் கம்பத்துடன் தொடுகை அடையும்பட்சத்தில் உயிராபத்து ஏற்படலாம் என்று அந்தப் பகுதியினர் அச்சம் வெளியிட்டனர்.

இதேசமயம், இந்த மின் விளக்கு கம்பத்திலேயே பழுதடைந்த மின்விளக்கை மாற்றிய நல்லூர் பிரதேச சபையின் ஊழியர் மின்சாரத்தால் தாக்குண்டார். அவர் பாதுகாப்பு அங்கியுடன் இருந்தமையால் தெய்வாதீனமாக உயிர் தப்பினார். எனினும், அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேநேரம், தட்டார்தெரு சந்திக்கு அண்மையாக மின் விளக்கு கம்பத்தில் படர்ந்திருந்த கொடி தாவரத்தை உட்கொள்ள முயன்ற மாடு ஒன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்தமை யும் குறிப்பிடத்தக்கது.

எனவே, குறித்த மின்விளக்கு தொடர்பில் இலங்கை மின்சார சபையினர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரப்பட்டது. (ஐ - 03)

# மந்திகை விபத்து: முதியவர் காயம்!

வடமராட்சி, ஜூலை 04

பாடசாலை சேவை பேருந்தை மோட்டார் சைக்கிள் முந்திச் செல்ல முயன்றபோது ஏற்பட்ட விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்தார்.

வடமராட்சி - மந்திகையில் நேற்று வியாழக்கிழமை காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற முதியவரே காயமடைந்தார். அவர், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்துக் குறித்த விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பொலிஸாருக்கு விசேட கருத்தமர்வு மனித உரிமை குழு முன்னெடுத்தது

யாழ்ப்பாணம், ஜூலை 04

சித்திரவதையால் பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் பொலிஸாருக்கு விசேட கருத்தரங்கு நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, கிளிநொச்சி பொலிஸ் நிலையங்களை சேர்ந்த பொலிஸாருக்கே இந்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களை தடுத்து வைத்தல், விசாரணை செய்தல், தொடர்பான சட்ட ரீதியான விடயங்களை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் கலாநிதி ஜிகான் குணதிலக தலைமையில் செயலமர்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்த செயலமர்வில் வடக்கு மாகாண மனித உரிமைகள் இணைப்பாளர் த. கனகராஜ், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
04.07.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆனி 20

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## உள்ளூராட்சி சபைகளை நிர்வகித்தல்

உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றும் விடயத்தில் ஏட்டிக்குப்போட்டியாக மல்லுக்கட்டிய அளவுக்கு கைப்பற்றிய சபைகளை எவ்வாறு உச்சபட்சமாகப் பயன்படுத்துவது - அதற்கான ஆளுமையை எவ்வாறு மேம்படுத்துவது என்பது தொடர்பில் தமிழ் கட்சிகள் மத்தியில் எந்தவோர் உரையாடலும் நடைபெறவில்லை.

உள்ளூராட்சி மன்றங்களில் கன்னி உரையாற்றிய தமிழ்த் தேசிய கட்சிகளின் உறுப்பினர்கள் பலர் தங்களின் உரையை ஆரம்பிக்கும்போது "போராளிகளை நினைத்துக் கொள்வதாகவும் சிலரோ, அதற்கும் மேல் மாவீரர்களை மனதில் நினைத்தவர்களாக இந்த சபையில் எனது உரையை ஆரம்பிக்கிறேன்", என்றவாறு உரையாற்றுவதை அவதானிக்க முடிந்தது. விடுதலைப் புலிகள் எப்போது உள்ளூராட்சி சபைகளுக்காகப் போராடினார்கள்?

இதிலிருந்து ஒரு விடயம் தெளிவாகிறது. அதாவது, உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவாகியிருக்கும் பெரும்பாலான தமிழ் உறுப்பினர்களுக்கு உள்ளூராட்சி சபை என்றால் என்னவென்று தெரியவில்லை. அவர்களுடைய தலைமையும் அதற்கான பயிற்சியை அவர்களுக்குக் கொடுக்கவில்லை.

ஆயுத மோதல் இடம்பெற்ற காலத்தில் நாட்டின் அரசியல் கட்டமைப்புகளை உச்சபட்சமாக பயன்படுத்தும் விடயம் ஒருபோதும் பிரதான பேசுபொருளாக இருந்ததில்லை. அன்றைய சூழலில் அது பெறுமதியற்ற ஒன்றாக இருந்ததைப் புரிந்து கொள்ளமுடியும். ஏனெனில், போராட்டமும் அதற்காக உயிர்களையும் உடைமைகளையும் இழப்பது ஒன்றுதான் தமிழ்த் தேசிய கடமையென்னும் அரசியலே அப்போது மேலாதிக்கம் பெற்றிருந்தது. அதற்கு மாறாக கருத்துகளைக் கூறுவோரை வெறுப்பாக நோக்கும் நிலைமையே காணப்பட்டது. அத்துடன், அன்றைய சூழலில் நாட்டின் அரசியல் கட்டமைப்புகளை உச்சபட்சமாகப் பயன்படுத்துவதற்கான ஜனநாயக சூழலும் இருந்திருக்கவில்லை.

ஆனால், 2009இற்கு பின்னரான நிலைமை அவ்வாறில்லை. உண்மையில், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளை உச்சபட்சமாகப் பயன்படுத்துவதைத் தவிர, வேறு எதுவும் இல்லையென்னும் நிலைமையே காணப்பட்டது. ஆனால், அரசியல் தலைமைகள் என்போரோ அதற்கான சூழலை பலப்படுத்தாமல் வெறும் கற்பனைகளை பரப்புவதிலேயே தங்களின் நேரத்தை செலவிட்டனர். எவையெல்லாம் தங்களின் ஆற்றலுக்கு அப்பால்பட்ட விடயங்களோ அவை பற்றிப் பேசுவதை ஒரு கௌரமாகப் பாதுகாக்க முற்பட்டனர். இதனால், ஏற்பட்ட மோசமான விளைவு? இறுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரே அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுங்கள் என்று கூறிச் சென்றிருக்கிறார். இவ்வாறானதொரு கூற்றை கேட்பதற்காகவா கடந்த பதினைந்து வருடங்கள் செலவழிக்கப்பட்டன?

ஒரு யுத்தத்துக்குப் பின்னரான குறிப்பாக, தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் போர் தோல்விக்குப் பின்னரான சூழலில் முன்னெடுக்க வேண்டிய யதார்த்தபூர்வமான அரசியல் தொடர்பில் இளையதலைமுறையினருக்கு பயிற்சி அளிக்கப்படவில்லை. மாறாக, அவர்கள் உணர்ச்சிவசப்படுவதற்கே பயிற்சியளிக்கப்பட்டனர். போலியான நம்பிக்கைகளும் தவறான அரசியல் கற்பனைகளுமே அவர்களுக்குள் விதைக்கப்பட்டன.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் உள்ளூராட்சி மன்றங்களை முறையாக நிர்வகிப்பதற்கான ஆற்றல் தமிழ் கட்சிகளின் உறுப்பினர்களுக்கு இல்லை. உறுப்பினர்களாகி இருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் உள்ளூராட்சி தொடர்பான அடிப்படை அறிவற்றவர்களாகவே அங்கு சென்றிருக்கின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு முதலில் கட்சிகளின் தலைமைகள் தங்களின் உறுப்பினர்களை உள்ளூராட்சிக்கு பழக்கப்படுத்தும் பணிகளை முன்னெடுக்க வேண்டும். நாட்டில் வெற்றிகரமாக இயங்கிய உள்ளூராட்சி மன்ற உதாரணங்களை அறிந்து அவற்றிலிருந்து கற்றுக்கொள்ளும் நடைமுறை வேலைத்திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும்.

# கண்டாவளை பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழு கூட்டம்!

கிளிநொச்சி, ஜூலை 04

கண்டாவளை பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று வியாழக்கிழமை அந்த குழுவின் தலைவரும் கடற்தொழில் அமைச்சருமான இ. சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

கண்டாவளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடந்த இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன் துறைசார், திணைக்களங்களின் திணைக்கள தலைவர்கள், பொலிஸ், கடற்படை, கிராம சேவையாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, கண்டவளை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள கிராமங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி வேலை திட்டங்கள், மத்திய மற்றும் மாகாண அரசுகளின் நிதி ஒதுக்கீடுகளின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

அத்துடன், குறித்த பிரதேசத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் சட்ட விரோத செயல்பாடுகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

(ஐ)

# அருளம்பல சுவாமிகளின் 100ஆவது குருபூசை அனுஷ்டிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 04

ஈழத்து சித்தர் கீரிமலையில் சமாதி கொண்டு உறையும் அருளம்பல சுவாமிகளின் 100ஆவது குருபூசை தினம் நேற்று வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

அருளம்பலம் சுவாமிகளின் சமாதியில் விசேட பூசை வழிபாடு நடைபெற்றதுடன், தொடர்ந்து மகேஸ்வர பூசையும் அதனைத் தொடர்ந்து அருளம்பலம் சுவாமிகளின் நூல் வெளியீடு, சுவாமிகள் நினைவாக நடத்தப்பட்ட வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கல், 100 மரக்கன்று நடுகை என்பனவும் முன்னெடுக்கப்பட்டன.

நூலின் முதற் பிரதியை சிவகுரு ஆதீன குரு முதல்வர் வேலன் சுவாமிகள் வெளியிட பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா பெற்று கொண்டார்.

இதன்போது, அகில இலங்கை சைவ மகாசபையினர், தமிழ் சைவ பேரவையினர் , பேராசிரியர்கள், அருளம்பலம் சுவாமிகளின் வழித்தோன்றல்கள் , அறநெறி பாடசாலை மாணவர்கள், யாழ். தாதிய கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-03)

# 8 இந்திய மீனவர்களுக்கும் விளக்கமறியல் நீடிப்பு!

முல்லைத்தீவு, ஜூலை 04

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 8 இந்திய மீனவர்களுக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.


கடந்த ஜூன் 29ஆம் திகதி மன்னார் கடற்பரப்பில் இராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் நேற்றைய தினம் மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் அவர்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை இந்த வருடத்தில் இதுவரை 23 படகுகளுடன் 174 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-07)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை - 04 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆனி 20
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : நவமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். அமோகமான நாள்.

**இடபம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். எல்லோரும் மதிப்பார்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக்கொள்வீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**மிதுனம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் அடைவீர்கள். உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**சிம்மம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் இழுத்துப்போட்டு பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**துலாம்**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் சோர்வு வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**விருச்சிகம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் நினைத்ததை முடிப்பீர்கள். இனிமையான நாள்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். பதவியில் இருப்பவர்கள் உதவு வார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். முயற்சியால் முன்னேறுவீர்.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். வியாபாரத்தில் புதிய யுக்திகளை கையாண்டு வியாபாரத்தை பெருக்குவீர்கள். புதிய பாதை தெரியும்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான வேலைகளை எல்லாம் கையில் எடுத்து கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப்போவது நல்லது. புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**மீனம்**
பிள்ளைகள் உங்கள் அருமையைப் புரிந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உயரதிகாரி உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்

# வவுனியாவில் 2000 குடும்பங்கள் காணி கோரி விண்ணப்பம்

வவுனியா, ஜூலை 04

வவுனியாவில் 2 ஆயிரம் குடும்பங்கள் காணி கோரி விண்ணப்பித்துள்ள நிலையில் அதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்படும் என கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற வவுனியா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த வருடம் 80 வீதமான காணிப் பிரச்னைகளைத் தீர்க்க முடியும்.

இதற்கான சிறப்பு வேலைத் திட்டம் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வனவளத் திணைக்களத்தால் எல்லை இடும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

வவுனியாவில் 25 ஆயிரம் ஏக்கர் காணிகள் விரைவில் விடுவிக்கப்படும்.

வன்னியில் முழுமையாக 50 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளன.

இதற்கான விசேட குழு அமைக்கப்பட்டுள்ளது.

வனவளத் திணைக்களம், பிரதேச செயலகம், காணி அமைச்சு இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளன.

பிரதேச செயலாளர் ஊடாக காணி கோரிய 2 ஆயிரம் குடும்பங்களுக்கு காணி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என உபாலி சமரசிங்க மேலும் தெரிவித்தார். (எ-10)

# இலவச முழுநேர உயர்கல்வி வாய்ப்புக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

வவுனியா, ஜூலை 04

வவுனியா உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் 2024ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இலவச முழுநேர உயர்கல்வி வாய்ப்பை தொடர்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

1. உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (முழுநேரம் /பகுதி நேரம்) 04 ஆண்டுகள்,

2. உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா (முழுநேரம் / பகுதி நேரம்) 02½ ஆண்டுகள்,

3.தகவல் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (முழுநேரம் / பகுதிநேரம்) 02½ ஆண்டுகள்.

விண்ணப்ப முடிவுத்திகதி: -14. 07. 2025

மேலதிக விபரங்களுக்கு: உயர் தொழிநுட்பவியல் நிறுவனம், ஓமந்தை, வவுனியா

தொலைபேசி இலக்கம்- 0242052733, 0776162010, 0772313189, 0770257314 என அறிவிக்கப்பட்டுள்ளது.(எ-10)

# இளவயது திருமணத்தால் ஏற்படும் பாதிப்புகளை தடுக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 04

இளவயது திருமணத்தால் ஏற்படும் விளைவுகள் மற்றும் போதைப்பொருள் பாவனை போன்ற சமூகப் பிறழ்வான விடயங்கள் - அதிகமாக அடையாளம் காணப்பட்ட கிராமங்களில் அல்லது இடங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெற்று விழிப்புணர்வு வீதி நாடகத்தை நடத்துமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் அறிவுறுத்தல் வழங்கினார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழுவின் இரண்டாம் காலாண்டுக் குழுக்கூட்டம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், அரசாங்க அதிபரால் பின்வரும் விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

சிறுவர் தொடர்பான பிரச்னைகள் மற்றும் முறைப்பாடுகளை பிரதேச செயலக மட்டத்தில் ஆராயப்பட்டு தீர்க்கப்படுவதுடன், தீர்க்க முடியாத பிரச்னைகளை மாவட்ட மட்டத்தில் ஒருங்கிணைந்து தீர்ப்பதே இக் கூட்டத்தின் நோக்கமாகும்.

பிள்ளைகளின் பதிவு செய்யப்படாத பிறப்புச் சான்றிதழ்களை வழங்குவதற்கான நடமாடும் சேவையை நடத்துமாறும் அந்தவகையில் உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, காரைநகர் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பிரிவுக்குரிய நடமாடும் சேவையை உடுவில் பிரதேச செயலகத்தில் ஆவணி மாதம் 06 ஆம் திகதியும், சாவகச்சேரியில் ஆவணி 13 ஆம் திகதியும், வேலணை, ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பிரிவிற்குரிய நடமாடும் சேவையை வேலணை பிரதேச செயலகத்தில் ஆவணி மாதம் 21 ஆம் திகதியும், யாழ்ப்பாணம், நல்லூர் மற்றும் கோப்பாய் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பிரிவிற்குரிய நடமாடும் சேவையை நல்லூர் பிரதேச செயலகத்தில் ஆவணி மாதம் 27 ஆம் திகதியும் நடாத்த ஒழுங்கமைப்பினைச் செய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு அரசாங்க அதிபரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. மேலும் சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இவை தொடர்பான அறிவுறுத்தல்களை பாடசாலை அதிபர்களுக்கு முன்கூட்டியே அறிவிக்குமாறும் அதிபர்களுக்கான கூட்டத் திகதியை அறியத் தந்தால் எமது உத்தியோகத்தர்கள் மூலம் விவரமாக தெளிவுபடுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

மாணவர்கள் தொடர்பான நலன்பேணுவதற்கும் விழிப்புணர்வு செயல்திட்டங்களை நடத்துவதற்கும் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் தேவையான உத்தியோகத்தர்கள் இருப்பதனால், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அதனை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதேவேளை நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவு மற்றும் எழுவைதீவிலுள்ள சகல பாடசாலைகளிலும் ஆவணி மாதத்தில் பொருத்தமான திகதிகளில் தொழில்கல்வி மற்றும் சமூக விழிப்புணர்வு செயல்திட்டத்தை நடத்துமாறு அரசாங்க அதிபரால் அறிவுறுத்தப்பட்டது. (எ)






வடக்கு மாகாண அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வருடாந்த மாநாடு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

(படங்கள்:- த. பிரதீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலாப்பயணிகளாக இலங்கை வரும் இஸ்ரேலியர் சிலர் போதை வர்த்தகத்தில்!

## கொழும்பு ஆங்கில ஊடகம் தகவல்

கொழும்பு, ஜூலை 04

**சுற்றுலாப் பயணிகளாக இலங்கை வரும் வரும் சில இஸ்ரேலியர்கள் கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் அவர்கள் நடத்தும் சட்ட அனுமதியற்ற வர்த்தக நிறுவனங்களில் பல்வேறு வகையான போதைப்பொருட்களை விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளனர் என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பில் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-இது பொது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக சுற்றுலா அதிகாரிகளுடன் பகிர்ந்து கொள்ளப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

சில வெளிநாட்டினர் இரவு விடுதிகள் மற்றும் விருந்தினர் இல்லங்கள் போன்ற வணிக முயற்சிகளை நிறுவியுள்ளனர். இஸ்ரேலியர்களின் இலங்கை சகாக்களின் பெயர்களில் இவை இயங்குகின்றன.

சட்ட விதிமுறைகளைத் தவிர்ப்பதற்கான ஒரு மறைப்பாக உள்ளூர்வாசிகள் இதில் ஈடுபட்டுள்ளனர். கிழக்கு கடற்கரையில் உள்ள அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரிவில் உள்ள அறுகம்பை உல்லா கோமாரி மற்றும் பனாமா போன்ற பகுதிகளிலிருந்து வழக்குகள் பதிவாகியுள்ளன என சுற்றுலாத்துறை குறித்து நன்கறிந்த வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

இந்த வெளிநாட்டினர் தங்கள் சேவைகளை மற்ற சக சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குகிறார்கள். மேலும் ஈட்டப்படும் வருமானம் உண்டியல் போன்ற கட்டுப்பாடற்ற பணப் பரிமாற்ற முறைகள் மூலம் தாய்நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுகிறது. இதன் விளைவாக இலங்கைக்கு சுற்றுலாவிலிருந்து முறையான வருவாய் மறுக்கப்படுகிறது.

வட்ஸ்அப் மற்றும் பேஸ்புக் போன்ற தளங்களில் உள்ள மூடிய சமூக ஊடகக் குழுக்கள் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு இந்த இடங்களில் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுகிறது. இது பொதுமக்களின் பாது காப்பு மற்றும் சட்டபூர்வமான சுற்றுலா நடைமுறைகள் பாதிப்பு குறித்து குறித்து கவலைகளை எழுப்புகிறது என சுற்றுலாத் துறை குறித்து நன்கறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த வலையமைப்புகள் டிஜிற்றல் முறையில் இயங்குவதாலும் ஏற்கனவே சுற்றுலாப் பயணிகளாக இருக்கும் வாடிக்கையாளர்களின் நெருக்கமான குழுவிற்கு சேவை செய்வதாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த வயமைப்புகளை அகற்றுவது கடினமாகக்கண்டறிந்துள்ளனர்.

சட்டவிரோதமாக வணிகங்களில் ஈடுபடும் வெளிநாட்டினர் உணவட்டுன மற்றும் வெலிகம போன்ற சுற்றுலாப் பகுதிகளில் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. அவர்கள் ரக்ஸி சேவைகளையும் வழங்குகிறார்கள்.

முன்னதாக இஸ்ரேலியர்கள் கொழும்பு வெலிகம மற்றும் எல்ல ஆகிய இடங்களில் யூத மத மையங்களாக இருக்கும் மூன்று சபாத் ஹவுஸ்களை நடத்துவதாக பாராளுமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டது. மத வழிபாட்டுத் தலங்களைக் கையாளும் இலங்கைச் சட்டத்தில் பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் மற்றும் இந்து தொடர்பான விதிகள் உள்ளன. ஆனால் யூத மதம் தொடர்பான விதிகள் இல்லை. இதன் விளைவாக புத்தசாசனம் மத மற்றும் கலாசார விவகார அமைச்சகம் நாட்டில் உள்ள யூத மத இடங்களை நேரடியாகக் கையாள முடியாது-என்றுள்ளது. (அ)

# பொதிகளில் இலங்கைக்கு வந்த போதைப்பொருட்கள் பறிமுதல்!

கொழும்பு, ஜூலை 04

விரைவு தபால் சேவை ஊடாக மிகவும் சூட்சுமான முறையில் மறைத்து பொதியிடப்பட்டு நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட 60 மில்லியன் ரூபாய்க்கும் அதிக பெறுமதியுள்ள போதைப்பொருட்களை சுங்கத் திணைக்களம் பறிமுதல் செய்துள்ளது.

சுங்கத் திணைக்களத்தின் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் கடந்த 2024 ஜனவரி 1 முதல் இந்த வருடம் ஜூன் மாதம் வரை சர்வதேச விரைவு தபால்சேவை ஊடாக அமெரிக்கா, கனடா மற்றும் மலேசியாவிலிருந்து பெறப்பட்ட போதைப் பொருள் இருப்பதாக சந்தேகிக்கப்படும் பல பொதிகளை சோதனை நடவடிக்கைகளுக்காக தடுத்து வைத்துள்ளனர்.

நீண்ட காலமாக பொதிகளை உரிமை கோராததால், அவைகளை விரிவான சோதனைகளுக்கு உட்படுத்த சுங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, கடந்த 25 ஆம் திகதி சுங்கத் திணைக்களத்தின் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பொதிகளை திறந்து ஆய்வு செய்தனர், இதன்போது பொதிகளுக்குள் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஏராளமான போதைப்பொருட்களைக் கண்டுபிடிக்க முடிந்தது.

அந்தப் பொதிகளில் 1 கிலோ 101 கிராம் கொக்கேய்ன், 1 கிலோ 666 கிராம் மெத்தம் பேட்டமைன் மற்றும் நான்கு குப்பிகளில் கஞ்சா எண்ணெய் இருந்ததாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.(அ)

# வழிப்பறி கொள்ளையால் பறிபோன யுவதியின் உயிர்!

கொழும்பு, ஜூலை 04

இரத்தினபுரியில் குருவிட்ட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெவிபஹல - தொடன்எல்ல வீதியில் இனந்தெரியாத நபரொருவர் யுவதி ஒருவரின் கழுத்தை வெட்டி அவரது கழுத்தில் இருந்த தங்க மாலையை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளதாக குருவிட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.உயிரிழந்தவர் குருவிட்ட - தெவிபஹல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய யுவதி ஆவார்.யுவதியின் சடலம் இரத்தினபுரி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மேர்வின் சில்வா உள்ளிட்ட மூவர் பிணையில் விடுதலை

கொழும்பு, ஜூலை 04

கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்கு போலி ஆவணங்களை தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ள முன்னாள் அமைச் சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட மூவரை பிணையில் விடுதலை செய்யுமாறு கம்பஹா மேல் நீதிமன்றம் நேற்று வியாழக்கி ழமை உத்தரவிட்டது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட மூவரும் கம்பஹா மேலதிக நீதவான் டபிள்யூ கே டி விஜே ரத்ன முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட் டது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்கு போலி ஆவணங்களை தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து கடந்த மார்ச் மாதம் 05ஆம் திகதி குற்றப்புலனாய்வு திணைக் கள அதிகாரிகளால் கைது செய் யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த நிலையில் நேற்று பிணையில் விடுதலை செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# துறைமுகங்களில் பிரச்னைகளை தீர்க்க 750 மில்லியன் ரூபாய் நிதி!

கொழும்பு, ஜூலை 04

கடற்றொழில் துறைமுகங்களில் நிலவும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரத்துடன், 750 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார்.

கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் சவால்களுக்கு விரைவான தீர்வுகளை வழங்கும் நோக்கில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டில் செயற்பாட்டிலுள்ள, 22 கடற்றொழில் துறைமுகங்களின் நிலைமைகள், சேவைகள் பெறுவதிலுள்ள சிக்கல்கள் மற்றும் துறைமுகப் பகுதிகளில் நிலவும் டெங்கு நோய் பரவல் பிரச்னை என்பன குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடற்றொழில் துறைமுகங்களில் நிலவும் குறைபாடுகள் அனைத்தையும், விரைவாக நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், மாவட்ட கடற்றொழில் ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைச்சினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும், அவை வெற்றிகரமாகச் செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் குழுக்களின் ஊடாக, கடற்றொழிலை மேம்படுத்துவதற்கும், கடற்றொழில் சமூகத்திற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் விரைவாக வழங்குவதற்கும் அரசாங்கம் உறுதியாகவுள்ளது.

2026ஆம் ஆண்டளவில் இலங்கையின் கடற்றொழிலை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவது அரசாங்கத்தின் பிரதான எதிர்பார்ப்பாகும் எனவும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே கூறினார். (அ)

# பகிடிவதை மட்டுமல்லாமல் அனைத்து வகை வன்முறைகளையும் விசாரிக்குமாறு பணிப்பு

கொழும்பு, ஜூலை 04

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர், பிரதமர் ஹரிணி அமரசூரிய, இலங்கை முழுவதும் உள்ள பல்கலைக்கழக அமைப்பு மற்றும் பிற உயர்கல்வி நிறுவனங்களுக்குள் நடைபெறும் பகிடிவதை மட்டுமல்லாமல் அனைத்து வகையான வன்முறைகளையும் விசாரிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

பகிடிவதை மற்றும் வளாக வன்முறையை ஒழிப்பதற்கான தேசிய பணிக்குழு உறுப்பினர்களுடன் கல்வி அமைச்சில் நடைபெற்ற சந்திப்பின் போது பேசிய பிரதமர் அமரசூரிய, நடைமுறை பரிந்துரைகளை உருவாக்கி இந்தப் பிரச்சினைகளைத் தடுக்க உடனடி நடவடிக்கையைத் தொடங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மூன்று வருட காலத்துக்கு நியமிக்கப்பட்ட பணிக்குழு, கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர்களால் ஏற்படும் வன்முறை சம்பவங்களை ஆராய்ந்து, தகுந்த நடவடிக்கைகளை எடுக்க தேவையான அதிகாரம் மற்றும் அரசின் ஆதரவுடன் அதிகாரம் அளிக்கப்படும் என்று அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.


உயர்கல்வியில் வன்முறைக்கு பங்களிக்கும் பல காரணிகளை பணிக்குழுவின் பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர், அவற்றில் மாணவர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடையே சரியான உறவுகள் இல்லாதது, பகிடிவதை குறித்த மாணவர்களின் நச்சு மனப்பான்மை, மரியாதை கோர அல்லது அதிகாரத்தை நிலைநிறுத்த வன்முறையை ஒரு வழிமுறையாக தவறாகப் பயன்படுத்துவது ஆகியவை அடங்கும். கல்வி அழுத்தம் மற்றும் ஆசிரியர்களுக்குள் உள்ள அதிகார இயக்கவியல் ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட மன அழுத்தத்தையும் அவர்கள் சுட்டிக் காட்டினர். (அ)

# 7 நாடுகளில் இருந்து நாட்டுக்கு மருந்துகள்

கொழும்பு, ஜூலை 04

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், துருக்கி, இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட ஏழு நாடுகள், அந்தந்த நாடுகளின் சட்ட ஒழுங்குகளுக்கு அமைய, இலங்கைக்கு மருந்துகளை விநியோகிக்க ஒப்புக் கொண்டுள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மருந்துகளை கொள்வனவு செய்வது தொடர்பில், நான்கு நாடுகளுடன் ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத் திடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



அதற்கமைய, பாகிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகள், இதுவரையில் 113 மருந்துகளின் பட்டியலை சமர்ப்பித்துள்ளன. இலங்கை மருந்தாக் கல் கூட்டுத்தாபனத்தின் அனுமதிக்கமைய இந்த மருந்துகள் கொள்வனவு செய்யப்பட வுள்ளன. (அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை இந்தியா மீளப்பெற முடியாது!

**இலங்கை திட்டவட்டம்**

கொழும்பு, ஜுலை 04

**"கச்சதீவென்பது இலங்கைக்கு சொந்தமானது. அதனை மீளப்பெறுவதற்கு ஏதுவான சூழ்நிலை எதுவும் இல்லை." - என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**



கச்சதீவு விவகாரம் தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சரால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்து குறித்தும் கச்சதீவு மீளப்பெறக்கூடிய சூழ்நிலை உள்ளதா எனவும் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

' கச்சதீவென்பது தற்போது இலங்கைக்கு சொந்தமான தீவாகும். தென்னிந்திய அரசியலில் கச்சதீவு அரசியல் துரும்பு சீட்டாக பயன்படுத் தப்பட்டுவருகின்றது.

எப்படி இருந்தாலும் கச்சதீவு இந்தியாவுக்கு வழங்கப்படமாட்டாது. அதனை மீளகையகப்படுத்தவும் முடியாது. அது எமது மண்ணுக்கு சொந்தமாகும் "-என வெளிவி வகார அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## கல்கிசையில் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜுலை 04

கல்கிசை கடற்கரையில் நேற்று முன் தினம் இரவு அடையாளம் தெரியாத ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

பொலிஸாரின் கூற்றுப்படி, சடலம் ஒரு ஆணுடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஆனால் அவரது அடையாளம் இன்னும் கண்டறியப்படவில்லை.

இறந்தவர் நீல நிற நீண்ட கை சட்டை மற்றும் கறுப்பு கால்சட்டை அணிந்திருந்தார்.

சம்பவம் தொடர்பில் கல்கிசை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## இலங்கையர்களுக்கு கொரியாவில் அதிகளவு வேலைவாய்ப்பு


கொழும்பு, ஜுலை 04

இலங்கையர்களுக்கான கொரிய வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கொரியத் தூதுவருக்கும் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்த விவகாரம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை தொழிலாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் கொரிய வேலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது மற்றும் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது குறித்தும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. (அ)

## ஜனாதிபதி செயலாளருடன் நெதர்லாந்து தூதர் சந்திப்பு



கொழும்பு, ஜுலை 04

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் பொனி ஹோர்பாக் ஆகியோருக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்றது.

தற்போது நெதர்லாந்தில் உள்ள இலங்கையின் பழங்காலப் பொருட்கள் மற்றும் ஓலைச்சுவடிகளை மீளக் கொண்டுவருவது குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தப் பணியில் இலங்கை அரசாங்கம் வழங்கிய ஆதரவிற்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்ட பொனி ஹோர்பாக் இரு நாடுகளுக்கும் இடையிலான கலாசார உறவுகளை வலுப்படுத்த இது ஒரு முக்கியமான வாய்ப்பாகக் கருதுவதாகவும் தெரிவித்தார்.

காலனித்துவ நாடுகளுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்த, நெதர்லாந்து அரசாங்கம் காலனித்துவ காலத்து கலைப் பொருட்களை உரிய நாடுகளுக்கே மீண்டும் திருப்பி வழங்குவதற்கான கொள்கை முடிவை எடுத்துள்ளது. அதன்படி, அவர்கள் அந்தக் கலைப்பொருட்களை மீளமைப்பதற்கான ஆரம்பமாக ஒரு ஆராய்ச்சித் திட்டத்தைத் தொடங்கியுள்ளதுடன், அந்நாட்டில் உள்ள காலனித்துவ கலைப்பொருட்கள் தொடர்பில் கூட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இலங்கை அதிகாரிகளுடன் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதன் ஆரம்பமாக, இலங்கையின் தேசிய ஆவணக் காப்பகத் திணைக்களத்தின் தலைமையில் இரு நாட்டு ஆய்வாளர்களும் நெதர்லாந்தில் உள்ள ஓலைச்சுவடி கையெழுத்துப் பிரதிகள் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, கலாசார அலுவல்கள் தொடர்பான நெதர்லாந்து தூதுவரின் ஆலோசகர் கிரிஷேன் மெண்டிஸ் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## 202 மில்லியன் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சா கொழும்பில் மீட்பு!

கொழும்பு, ஜுலை 04

இலங்கை கடலோர காவற்படை, இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்துடன் இணைந்து வென்னப்புவ, போலவத்த பகுதியில் நேற்று முன் தினம் நடத்திய சிறப்புச் சோதனையில் 900 கிலோ கிராமுக்கும் அதிகம் எடையுள்ள கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கேரள கஞ்சாவின் பெறுமதியானது 202 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை கடலோரக் காவற்படைக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், வென்னப்புவ, போலவத்த பகுதியில் சந்தேகத்துக்கிடமாக பயணித்த கப் வண்டியொன்றை மடக்கி முன்னெடுக்கப்பட்ட கூட்டுச் சோதனையின்போது இந்த மீட்பு இடம்பெற்றுள்ளது.

கேரளக் கஞ்சாவுக்கு மேலதிகமாக இரண்டு வெளிநாட்டு கைத்துப்பாக்கிகள், நான்கு மெகசின்கள், 40 தோட்டாக்கள் என்பவற்றுடன் மூன்று சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், கடத்தல் நடவடிக்கைக்காக அவர்கள் பயன்படுத்திய கப் வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டது.

சந்தேக நபர்களிடமிருந்து வெளிப்படுத்தப்பட்ட மேலதிக தகவல்களின் அடிப்படையில் இந்த மோசடியில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் மற்றொரு நபர், மோட்டார் வாகனத்துடன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 44 முதல் 51 வயதுக்குட்பட்ட உலுக்குளம், போத்தானேகம மற்றும் அனுராதபுரம், இஹலகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

கைதான சந்தேக நபர்கள், கேரளக் கஞ்சா, கைத்துப்பாக்கிகள், மகசின்கள், தோட்டாக்கள் மற்றும் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கொழும்பு போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டன. (அ)

## விபத்துகளால் வருடாந்தம் 10 இலட்சம் பேர் சிகிச்சை!

கொழும்பு, ஜுலை 04

பல்வேறு விபத்துகள் காரணமாக ஆண்டுதோறும் சுமார் ஒரு மில்லியன் மக்கள் அரச மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாக சிகிச்சை பெறுவதாக சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவின் இயக்குநர் மருத்துவர் சமித சிறிதுங்க தெரிவித்தார்.

இந்த நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 12,000 பேர் விபத்துகளால் இறக்கின்றனர் என்றும், உலகில் ஒவ்வொரு 8 வினாடிக்கும் ஒருவர் விபத்து காரணமாக இறக்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்றபோது அவர் இவ்வாறு கூறினார்.

பல்வேறு காரணங்களால் ஆண்டுதோறும் விபத்துக்குள்ளாகும் மக்களின் எண்ணிக்கை 3 மில்லியனுக்கும் அதிகமாகும் என்றும் அவர் கூறினார்.

விலங்குகள் கடித்தால் சிகிச்சை பெற அரச மருத்துவமனைகளின் வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளிகளில் பெரும்பாலோர் விபத்துகளால் பாதிக்கப்படுபவர்களே என்றும், அந்த எண்ணிக்கை சுமார் 70 சதவீதம் என்றும் அவர் கூறினார். தற்கொலைகள் அதிகரித்துள்ளதாகவும், நீரில் மூழ்கி ஆண்டுதோறும் சுமார் 1,000 பேர் இறக்கின்றனர் என்றும் அவர் கூறினார். ஆண்டுதோறும் பல்வேறு காரணங்களால் விழுந்து 1300 பேர், வீதி விபத்தக்களால் 2500 பேர், பல்வேறு விஷங்களால் 1000 பேர் இறக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மாதம் 7 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை தேசிய விபத்து தடுப்பு வாரம் நடைபெறும் என்றும், இதன் மூலம் விபத்துகளைத் தடுக்க எதிர்பார்க்கப்படுகிறது என்றும் வீதிப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து இயக்குநரகத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திக ஹப்புகொட தெரிவித்தார்.

இந்த வாரத்தில், 7 ஆம் திகதி வீதி விபத்து தடுப்பு, 8 ஆம் திகதி பணியிட விபத்து தடுப்பு, 9 ஆம் திகதி வீடுகள் மற்றும் முதியோர் இல்லங்கள், 10 ஆம் திகதி நீரில் மூழ்குவதைத் தடுப்பது, 11 ஆம் திகதி பாலர் பள்ளி விபத்து தடுப்பு போன்ற திட்டங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

## மஸ்க்குக்கு நன்றி தெரிவித்த ரணில்

கொழும்பு, ஜுலை 04

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி எலான் மஸ்க்கிற்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமது சேவைகள் தற்போது நடைமுறைக்கு வந்துள்ளதாக, ஸ்டார்லிங்க் அதிகாரபூர்வமாக அறிவித்தது.

இதனையடுத்து ரணில் விக்கிரமசிங்க, இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

எலான் மஸ்க்கை தாம் விரைவில் சந்திக்க எதிர்பார்ப்பதாகவும், இலங்கையின் டிஜிற்றல் வாய்ப்புகள் தொடர்பில் ஆராய எதிர்பார்ப்பதாகவும் குறித்த அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற 10 ஆவது உலக நீர் உச்சி மாநாட்டில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க மஸ்க்கை சந்தித்து, ஸ்டார்லிங் செயற்கைக்கோள் இணைய சேவைகளுக்கான அனுமதி செயல்முறையை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அணு உலை விபத்து ஏற்பட்டால் கதிர்வீச்சு அளவை கண்காணிக்க முன்கூட்டிய எச்சரிக்கை நடவடிக்கை

கொழும்பு, ஜுலை 04

அணு விபத்து ஏற்பட்டால் கதிர்வீச்சு அளவைக் கண்காணிக்க முன்கூட்டியே எச்சரிக்கை அமைப்பை நிறுவ இலங்கை அணுசக்தி ஒழுங்குமுறை பேரவை நடவடிக்கை எடுத்துள்ளது. சர்வதேச அணுசக்தி நிறுவனத்துடன் இணைந்து இது செயல்படுத்தப்படுவதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கற்பிட்டி, மன்னார், நெடுந்தீவு, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை கடற்படைத் தளங்களில் இந்த அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. அண்டைய நாடுகளில் உள்ள அணு மின் நிலையங்களில் ஏற்படும் இயற்கை அல்லது மனிதனால் ஏற்படும் விபத்துகள் காரணமாக நாட்டிற்குள் நுழையக்கூடிய கதிர்வீச்சைக் கண்டறிய இந்த அமைப்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளன என்று எரிசக்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்துகளில் சிக்கும் சிறுவர்கள் எண்ணிக்கை நாட்டில் அதிகரிப்பு

## பேராசிரியர் ருவந்தி பெரேரா கருத்து

கொழும்பு, ஜூலை 04

**விபத்துகளில் சிக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் சிறுவர் வைத்தியர் பேராசிரியர் ருவந்தி பெரேரா தெரிவித்துள்ளார்.**

தேசிய விபத்து தடுப்பு வாரத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-விபத்துகளில் சிக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை தெற்காசிய நாடாக இலங்கையில் மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக, நம் நாட்டில் உள்ள தரவுகளைப் பார்க்கும்போது, விபத்துகளால் சிறுவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன.

நாங்கள் 16 வயது வரை சிறுவர்களாக பார்க்கிறோம்.

இதை பெரும்பாலும் இரு வெவ்வேறு வயதுக் குழுக்களாக பிரிக்கலாம்.

2 முதல் 3 வயது வரையிலான அறியாமையால் ஏற்படும் விபத்துகள்.

அடுத்ததாக, 12 முதல் 14 வயதுடையவர்கள் இளமைப் பருவத்தில் நுழையும் போது மேற்கொள்ளும் சோதனை நடவடிக்கைகளால் ஏற்படும் ஆபத்துகள்.

விபத்துகள் பல வடிவங்களில் வருகின்றன.

விழுதல், சுளுக்கு மற்றும் தீக்காயங்கள் ஆகியவை சிறுவர்கள் எதிர்கொள்ளும் மிகவும் பொதுவான விபத்துகளில் அடங்கும்.விபத்துகளைத் தடுப்பதற்காக சிறுவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்க வேண்டியது அவசியம்-என்றார். (அ)

# தேசிய டெங்கு கட்டுப்பாடு 48,354 இடங்களில் சோதனை

கொழும்பு, ஜூலை 04

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தில் நாடு முழுவதும் ஆய்வுகள் தொடரும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மொத்தம் 22,294 வளாகங்கள் ஆய்வு செய்யப்பட்டன. கடந்த இரண்டு நாட்களில், நாடு முழுவதும் மொத்தம் 48,354 இடங்கள் சோதனை செய்யப்பட்டுள்ளன என அமைச்சு தெரிவித்துள்ளது.

இவற்றில், 4,965 இடங்கள் நுளம்புகள் இனப்பெருக்கம் செய்யக்கூடிய இடங்களாக அடையாளம் காணப்பட்டன, அதே நேரத்தில் 657 இடங்களில் நுளம்பு குடம்பிகள் இருப்பது கண்டறியப்பட்டது.

அதன்படி, 553 நபர்களுக்கு சிவப்பு அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளதுடன் 153 நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களில், நாடு முழுவதும் மொத்தம் 48,354 இடங்கள் சோதனை செய்யப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகளின் மூலம் 10,591 நுளம்பு பெருக்கம் செய்யக்கூடிய இடங்கள் அடையாளம் காணப்பட்டன.

மேலும், 1,611 இடங்களில் நுளம்பு குடம்பிகள் கண்டறியப்பட்டன. இதன் விளைவாக, 1,193 சிவப்பு அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. (அ)

# திரவப் பால் உற்பத்தியை மீளக்கட்டியெழுப்ப ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 04

கைவிடப்பட்ட திரவப் பால் உற்பத்தி மற்றும் விற்பனையை மீண்டும் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு லீற்றர் திரவப் பால் பைக்கெற்றின் வெளியீடும் இந்த நிகழ்வின் சிறப்பு அம்சமாக அமைந்தது.

இதன்போது கருத்து தெரிவித்த கால்நடை வளங்கள் அமைச்சர் கே.டி. லால்காந்த-

பல ஆண்டுகளாக, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை மக்களுக்கு பல சேவைகளை வழங்கியுள்ளது. கடந்த காலங்களில், சில அரசாங்கங்கள் எடுத்த அரசியல் முடிவுகளால், இந்த நிறுவனம் மூடப்பட்டது. தற்போதைய அரசாங்கம் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையை மீளக் கட்டியெழுப்பி அதன் சேவைகளை மக்களுக்கு வழங் கவும் முடிவு செய்துள்ளது-என்றார்.

# கந்தானையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஜூலை 04

கம்பஹா மாவட்டம் கந்தானையில் நேற்று காலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தானை பொதுச் சந்தைக்கு அருகில் காரில் இருந்த இருவரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இருவர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கந்தானை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# 1,881 கிலோ பீடி இலைகளுடன் நீர்கொழும்பில் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 04

சுங்கவரி செலுத்தாமல் சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட பீடி இலைகளுடன் சந்தேக நபர் ஒருவர் நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் நீர்கொழும்பு - தெவனகுரண பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடான முறையில் பயணித்த லொறியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் நீர்கொழும்பு - பிட்டிப்பன்ன பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 1,881 கிலோ 100 கிராம் பீடி இலைகள் நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அஸ்வெசும இரண்டாம் கட்டத்துக்கு பயனாளர்களின் பட்டியல் வெளியீடு

கொழும்பு, ஜூலை 04

அஸ்வெசும திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்குத் தகுதிபெற்ற பயனாளர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த பட்டியல் அனைத்து பிரதேச செயலகங்களிலும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களிலும், விடயத்திற்குப் பொறுப்பான அலுவலகங்களிலும்காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பயனாளர்களின் பட்டியல், நலன்புரி நன்மைகள் சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்கான தகவல் சேகரிப்பின் போது வழங்கப்பட்ட தகவல்களில் ஏதேனும் திருத்தம் மேற்கொள்ள வேண்டுமாயின் அல்லது பட்டியலில் தங்களது பெயரை இணைக்க வேண்டுமாயின், விண்ணப்பதாரர்கள் மேன்முறையீடு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# லொறியை மோதிய சொகுசு பஸ் ஒருவர் உயிரிழப்பு! 7 பேர் காயம்!!

கொழும்பு, ஜூலை 03

லொறியுடன் சொகுசு பஸ் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 7 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று முன் தினம் அதிகாலை இடம்பெற்றுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த சொகுசு பஸ் ஒன்று, அதே வழியில் பயணித்த லொறி ஒன்றின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் சொகுசு பஸ்ஸில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 07 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் விபத்து தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# புதிய டிஜிற்றல் அடையாள அட்டைக்கு இந்திய நிறுவனங்களிடம் விலைமனு!

கொழும்பு, ஜூலை 04

இலங்கையில் புதிய டிஜிற்றல் அடையாள அட்டையை உருவாக்குவதற்காக இந்திய நிறுவனங்களிடமிருந்து விலைமனு கோரப்பட்டுள்ளதாக டிஜிற்றல் பொருளாதார அமைச்சகம் அறிவித்துள்ளது.

இந்த திட்டம் நான்கு மாத காலத்திற்குள் நிறைவடையும் என துணை அமைச்சர் எரங்க வீரரத்னதெரிவித்துள்ளார்.

இந்த முயற்சிக்கு நிதியளிப்பதற்காக இந்தியா 10.4 பில்லியன் ரூபாவை மானியமாக வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



புதிய டிஜிற்றல் அடையாள அட்டை அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# இலங்கையர்கள் மலேசியாவுக்கு விஸா இல்லாத பயணம் மேற்கொள்ளும் திட்டம் பரிசீலனையில்!

கொழும்பு, ஜூலை 04

இரு நாடுகளுக்கும் இடையிலான சுற்றுலா உறவுகளை வலுப்படுத்தும் பரந்த முயற்சிகளின் ஒரு பகுதியாக, இலங்கை குடிமக்களுக்கு விஸா இல்லாத பயணத்தை வழங்குவதற்கான ஒரு திட்டத்தை மலேசிய சுற்றுலா அதிகாரிகள் பரிசீலித்துள்ளனர்.

மலேசிய சுற்றுலாவின் ஆசியா மற்றும் ஆபிரிக்காவிற்கான சர்வதேச மேம்பாட்டு மூத்த இயக்குநர் நுவால் பாதிலாகு அஸ்மி, இலங்கையர்களுக்கு விஸா இல்லாத பயணத்தை வழங்குவது குறித்து ஏற்கனவே மலேசிய அரசாங்கத்திடம் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் முறையான கோரிக்கை இந்த முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் உள்ள மலேசிய தூதரகமும் இந்த முயற்சியை தீவிரமாக ஆதரிப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

“நாடுகள் அதிக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க விரும்புவதால், விஸா இல்லாத முயற்சிகள் உலகளவில் வேகம் பெற்று வருகின்றன. மலேசியாவும் அண்மையில் சீனா மற்றும் இந்தியாவிலிருந்து வரும் பயணிகளுக்கு விசா இல்லாத பயணத்தை வழங்க ஆரம்பித்துள்ளது.” என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


இதேவேளை,2024 ஆம் ஆண்டில் 58,000 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் மலேசியாவுக்கு சென்றுள்ளனர். இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 122 வீதம் அதிகரிப்பாகும்.

2025 ஆம் ஆண்டில் 31.4 மில்லியன் சர்வதேச சுற்றுலாப் பயணிகளையும், 2026 ஆம் ஆண்டுக்குள் 35.6 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இலக்கை மலேசியா நிர்ணயித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவையை அடிப்படையாகக்கொண்டு இயங்குவது தான் தேர்தல்கள் ஆணைக்குழு

## ஆணையாளர் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவிப்பு




மட்டக்களப்பு, ஜூலை 04

**"வர்த்தக நோக்கத்தோடோ, போட்டித் தன்மையோடோ இயங்காமல், முழுக்க முழுக்க மக்கள் சேவைகளை அடிப்படையாகக் கொண்டு, இயங்குவது தான் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவாகும்"- இவ்வாறு தெரிவித்துள்ளார் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க.**

2026 - 2029 ஆண்டுக்கான தேர்தல் மூலோபாயத் திட்டம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வஜன வாக்குரிமை என்பது மக்களின் உரிமையாகும். அந்த உரிமையைப் பாதுகாப்பதே இவ்வாறான மூலோபாய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். மேலும் மக்களின் கருத்துக்களைப் பெற்று, அடுத்து வரும் தேர்தலை நீதியானதாகவும் சுதந்திரமானதாகவும் நடத்துவது எமது கடமையாகும்.

இந்த நாட்டில், வெகுசனங்களோடு, தொடர்பாடல் செய்வதும் மிகப்பெரிய நிகழ்வுகளை நடத்துவதும் இலங்கை தேர்தல்கள் திணைக்களம் மட்டுமேயாகும்.

வர்த்தக நோக்கத்தோடோ, போட்டித் தன்மையோடோ இயங்காமல், முழுக்க முழுக்க மக்கள் சேவைகளை அடிப்படையாகக் கொண்டு, இயங்குவது தான் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயல்பாடு, செயல்பாட்டின் விளக்கம், 2026-2029 மூலோபாயத் திட்டத்தை அறிமுகப்படுத்துதல், அதன் செயல்பாடுகள் பங்குதாரர்களுக்கு எவ்வாறு பொருத்தமானவை மற்றும் முன்னேற்றம் குறித்த கருத்துக்களை வழங்குதல் மற்றும் 2026 - 2029 திட்டத்தைத் தயாரிப்பதற்கான செயல்முறை போன்ற பல விடயங்கள் இதன் போது தெளிவூட்டப்பட்டன.

மேலும் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தால் பதிலும் வழங்கப்பட்டன.

இதன்போது மாவட்ட அரசாங்க அதிபர் எம். ஹேமந்த குமார, மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் டி. நிறஞ்சன், அரச உயரதிகாரிகள், மகளிர், இளைஞர், மீனவர் சங்க செயல்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# மின்சாரம் தாக்கியதில் 16 வயது சிறுவன் பலி!

மட்டக்களப்பு, ஜூலை 04

மட்டக்களப்பு, முனைக்காடு கிராமத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை மின்சாரம் தாக்கியதில் 16 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைக்காடு கிராமத்தில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலயத்தில் வருடாந்த அலங்கார உச்சவம் இடம்பெற்றுவரும் நிலையில், ஆனி உத்தர நாளான நேற்று முன்தினம் அதிகாலை வேளை விசேட பூஜை நடைபெற்றது.

இதன்போது, குறித்த சிறுவன் பாம்புப் புற்றுக்கு பாலூற்றி விட்டு அதனருகில் நின்ற போது அருகில் இருந்த மின்குமிழுக்கு இணைக்கப்பட்டிருந்த மின் வடத்திலிருந்த மின் ஒழுக்கு காரணமாக சிறுவனுக்கு மின்சாரம் தாக்கிய நிலையில் குறித்த சிறுவன் உயிரிழந்தார்.

முனைக்காடு கிராமத்தை சேர்ந்த செந்தில்குமரன் கியோபன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த இடத்துக்கு சென்ற கொக்கட்டிச்சோலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன், சடலம் மகிழடித்தீவு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (எ)

# உகந்தைமலை வளாகத்தில் மரைகளுக்கு அச்சுறுத்தல்



பொத்துவில், ஜூலை 04

உகந்தைமலை சிறீ முருகன் கோவில் வளாகத்தில் தேங்கியுள்ள பிளாஸ்ரிக் குப்பை கூழங்களால் மரைகளுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் தொன்மை வரலாறு கொண்ட உகந்தை முருகன் ஆலய வளாகத்தை சுற்றி அதிகளவான மரைகள் காணப்படுகின்றன.

இந்த மரைகள் அச்சூழலில் உள்ள புற்கள் மேய்தல் மற்றும் தண்ணீர் தேவைக்காகவும் ஆலய வளாகத்துக்கு வருகை தருகின்றன.

எனினும் தற்போது பக்தர்களின் தான்தோன்றித்தனமான செயல்பாட்டினால் ஆலய வளாகத்தை சூழ பிளாஸ்ரிக் பொருட்களுடன் குப்பை கூழங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

இந்தக் குப்பைகள் உரிய முறையில் அகற்றப்படாமையால் அங்கு வரும் மரைகள் குப்பைகளை உண்பதை அவதானிக்க முடிவதுடன் அவற்றின் உயிருக்கும் இப்பிளாஸ்ரிக் பொருட்களால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளன.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ)

# சுகாதார தொழிலாளர்களுக்கு புதிய சீருடை வழங்கும் நிகழ்வு



கல்முனை, ஜூலை 04

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு புதிய சீருடை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை மாநகர சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபை ஆணையாளர் எம். றாபி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதவி ஆணையாளர் எம். அஸீம், மாநகர சபையின் உள்ளூராட்சி உத்தியோகத்தர் தாரிக் அலி சர்ஜூன் உட்பட சுகாதாரப் பிரிவு மேற்பார்வை உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர்.

இதன்போது கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவகற்றல் சேவையில் ஈடுபடுகின்ற சுமார் 80 சுகாதாரத் தொழிலாளர்களுக்கு தலா இரண்டு வீதம் புதிய சீருடைகள் வழங்கப்பட்டன. (எ)

# அட்டாளைச்சேனை பிரதேச சபை முஸ்லிம் காங்கிரஸ் வசமானது

கல்முனை, ஜூலை 04

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச சபையின் புதிய தவிசாளராக சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் எம். உவைஸ் தெரிவு செய்யப்பட்டார். இதே வேளை, உப தவிசாளராக தேசிய காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் முகம்மட் பாரூக் றஜீத் தெரிவானார்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் புதிய தவிசாளர் மற்றும் உப தவிசாளர் தெரிவு கூட்டம் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் முகம்மது அஸ்மி தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. (எ-01)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



திருகோணமலை, ஜூலை 04

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, ஆயுர்வேத திணைக்களம் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் இணைந்து நடத்திய சர்வதேச யோகா தின நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு திருகோணமலை, கோபாலபுரம் மாவட்ட ஆயுர்வேத வைத்திய சாலையில் கடந்த முதலாம் திகதி நடைபெற்றது.

கோபாலபுரம் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் அத்தியட்சகர் என். நிறஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வைத்தியர்கள், பயிற்சி வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர்களுக்கான சான்றிதழ்களை வைத்தியர் [illegible] வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் முழுமையான போர் நிறுத்தம் வேண்டும்

## ஹமாஸ் அமைப்பு வலியுறுத்தல்

காஸா, ஜூலை 04

**காஸாவில் போர் நிறுத்தம் செய்யத் தயார். அதேநேரத்தில், போர் முழுமையாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.**

இந்தநிலையில், அமெரிக்காவின் முயற்சிக்கு ஹமாஸ் ஆதரவு தெரிவித்துள்ளது. இதேநேரத்தில், இந்த போர் முழுமையாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அது வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் பேசிய ஹமாஸ் அதிகாரி தாஹர் அல்-நுனு, "ஒர் உடன்பாட்டை எட்டுவதில் போராளிக் குழு தயாராகவும் தீவிரமாகவும் உள்ளது. போரை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தெளிவாக வழிவகுக்கும் எந்தவொரு முயற்சியையும் ஏற்கத் தயாராகவுள்ளது"- என்று தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தைப் பற்றி விவாதிக்க ஹமாஸ் தூதுக் குழு, கெய்ரோவில் எகிப்திய மற்றும் கட்டார் மத்தியஸ்தர்களைச் சந்திக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. மீதமுள்ள 50 பணயக் கைதிகளை விடுவிப்பதற்குத் தயாராக இருப்பதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது. இதற்கு பதிலாக, இஸ்ரேலியர்கள் காஸாவிலிருந்து முழுமையாக வெளியேறி போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் அது கோரியுள்ளது. (எ)

# தலாய் லாமாவை தெரிவுசெய்ய சீன அரசின் ஒப்புதல் அவசியம்



பீஜிங், ஜூலை 04

அடுத்த தலாய் லாமாவை தெரிவு செய்யும் நடைமுறையில் தங்களது ஒப்புதலைப் பெறுவது முக்கியம் என்று சீன அரசு தெரிவித்துள்ளது.

அடுத்த தலாய் லாமாவை தெரிவு செய்வதற்கும், அங்கீகரிப்பதற்குமான பொறுப்பு காடன் போட்ராங் அறக்கட்டளை உறுப்பினர்களையே சாரும் என தலாய் லாமா அறிக்கை வெளியிட்ட நிலையில் சீன அரசு இவ்வாறு கூறியுள்ளது.

இது குறித்து பீஜிங்கில் செய்தியாளர் சந்திப்பில் சீன வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் கூறுகையில் "தலாய் லாமா உள்ளிட்ட பௌத்த தலைவர்களை தெரிவு செய்யும் நடைமுறைகளுக்கு சீன அரசின் ஒப்புதலும் அங்கீகாரமும் அவசியம். 18 ஆம் நூற்றாண்டில் கிங் வம்ச பேரரசால் அறிமுகப்படுத்தப் பட்ட தலாய் லாமா தெரிவு முறை பின்பற்றப்பட வேண்டும்" - என்றார். (எ)



# இமாச்சலில் கனமழையால் இதுவரை 51 பேர் உயிரிழப்பு

## 22 பேரை காணவில்லை

சிம்லா, ஜூலை 04

இந்தியாவின் இமாச்சல பிரதேசத்தில் கனமழை மற்றும் வெள்ளப் பெருக்கு நீடித்துவரும் நிலையில் இதுவரை பேர் 51 பேர் உயிரிழந்தனர். 22 பேரைக் காணவில்லை என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

இமாச்சலில் கடந்த 10 நாட்களுக்கும் மேலாக பெய்துவரும் பருவ மழையால் வெள்ளப் பெருக்கு, நிலச்சரிவு உள்ளிட்ட பேரிடர்கள் ஏற்பட்டுள்ளன. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இமாச்சல பிரதேச வருவாய் துறையின் கீழ் இயங்கி வரும் மாநில அவசர உதவி மையம் ஒட்டுமொத்த சேத மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இதன்படி இமாச்சலின் 12 மாவட்டங்களில் கடந்த ஜூன் 20 முதல் ஜூலை முதலாம் வரை வெள்ளம், நீரில் மூழ்குதல், நிலச்சரிவு, மின்னல் தாக்குதல், வீதி விபத்துகள் உள்ளிட்ட பேரிடர்களில் 51 பேர் உயிரிழந்தனர். 22 பேரை காணவில்லை. 103 பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சர்வதேச அணுசக்தி முகமைக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது

## ஈரான் ஜனாதிபதி அறிவிப்பு



தெஹ்ரான், ஜூலை 04

சர்வதேச அணுசக்தி முகமைக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது என்று ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷ்கியன் அறிவித்துள்ளார்.

ஈரானின் அணுசக்தி திட்டங்களை சர்வதேச அணுசக்தி முகமை நீண்ட காலமாக மேற்பார்வையிட்டு வந்தது. இதற்கு ஈரானும் ஒத்துழைத்தது. இதே நேரம் சமீபத்தில் தனது நாட்டின் அணுசக்தித் திட்டங்கள் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் தாக்குதல் நடத்தியது ஈரானுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. தங்கள் அணுசக்தி திட்டங்கள் அமைதிக்கானதும், உள்நாட்டு தேவைக்கானதும் என ஈரான் அறிவித்த போதும், நடந்த இந்தத் தாக்குதல்கள் அந்த நாட்டை கோபத்தின் உச்சிக்கு தள்ளியது.

எனவே, சர்வதேச அணுசக்தி முகமைக்கு இனியும் ஒத்துழைப்பு வழங்கக்கூடாது என அந்த நாடு முடிவு செய்தது. இது தொடர்பில் பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றியது. இதன் தொடர்ச்சியாக சர்வதேச அணுசக்தி முகமைக்கு வழங்கி வரும் ஒத்துழைப்பை நிறுத்த ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷ்கியன் உத்தரவிட்டுள்ளார். (எ)

அமெரிக்காவுக்குள் ஊடுருவும்

# இந்தியர்கள் எண்ணிக்கை 70 சதவீதமாக குறைந்தது

வாஷிங்டன், ஜூலை 04

அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக குடியேறும் இந்தியர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 70 சதவீதம் குறைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. வழக்கமாக அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக ஊடுருவினால் முதலில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள்.

இதன்பிறகு, அவர்களுக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டு வந்தது. அந்த நடைமுறையை ஜனாதிபதி ட்ரம்ப் இரத்து செய்து விட்டார். இதனால் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் மே வரையில் ஜோ பைடன் ஜனாதிபதியாக இருந்த கால கட்டத்தில் 34, 535 இந்தியர்கள் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் ஊடுருவியிருந்தனர். அந்த எண்ணிக்கை தற்போது ட்ரம்ப் ஜனாதிபதியான பிறகு 10, 382 ஆக குறைந்துள்ளது. (எ)

# ஷேக் ஹசீனாவுக்கு 6 மாதங்கள் சிறை!

## சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம்

டாக்கா, ஜூலை 04


பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

பங்களாதேஷ் பிரதமராக இருந்த அவாமி லீக் கட்சித் தலைவர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக கடந்த ஆண்டு மாணவர்கள் தொடர்போராட்டம் நடத்தினர். இது வன்முறையாக மாறிய தையடுத்து, கடந்த ஆண்டு ஒகஸ்ட் 5ஆம் திகதி இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதன் பிறகு அங்கு முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைந்தது.

இதையடுத்து, சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தில் ஹசீனா மீது பல்வேறு வழக்குகள் பதிவாகியுள்ளன. இந்த வழக்கை விசாரித்த தீர்ப்பாயம் ஹசீனா ஆஜராக உத்தரவிட்டது. ஆனால், அவர் ஆஜராகவில்லை. இதையடுத்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்த நிலையில், நீதிபதி முகமது குலாம் முர்துசா மொசும்தார் தலைமையிலான 3 பேர் அடங்கிய அமர்வு, நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ஹசீனாவுக்கு 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியது.





இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கானாவில் உயரிய விருதான ஸ்டார் ஒப் கானா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி அபார வெற்றி

## பங்களாதேஷ் அணி பரிதாபம்

கொழும்பு, ஜூலை 04

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.


பங்களாதேஷ் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் இலங்கை கைப்பற்றியது. இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான ஒருநாள் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது.

கொழும்பில் நடைபெற்ற இந்த ஆட்டத்துக்கான நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை முதலில் துடுப்பாட்டம் செய்வதாக அறிவித்தது.

இதில் மதுஷ்க 6 ஓட்டங்களிலும், பதும் நிஸ்ஸங்க ஓட்டம் எதுவும் எடுக்காமலும் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களம் கண்ட சரித் அசலங்க ஒருபுறம் நிலைத்து நின்று ஆட மறுபுறம் விக்கெட்கள் விழுந்த வண்ணம் இருந்தன. இதில் குசல் மெண்டிஸ் 45, ஜனித் லியனகே 29, ரத்நாயக்க 22, வனிந்து ஹசரங்க 22, கமிந்து மெண்டிஸ் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர்.

மறுபுறம் நிலைத்து நின்று ஆடிய சரித் அசலங்க சதம் அடித்து அசத்தினார். இறுதியில் இலங்கை அணி 49. 2 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 244 ஓட்டங்கள் எடுத்தது. இலங்கை தரப்பில் அதிகபட்சமாக சரித் அசலங்கா 106 ஓட்டங்கள் எடுத்தார். பங்களாதேஷ் தரப்பில் தஸ்கின் அகமது 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 245 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பங்களாதேஷ் அணி துடுப்பெடுத்தாடியது. அந்த அணி 167 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அனைத்து விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதனால், இலங்கை அணி 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. வனிந்து ஹசரங்க 4 விக்கெட்களும் கமிந்து மெண்டிஸ் 3 விக்கெட்களும் வீழ்த்தினர். (எ)





2ஆவது டெஸ்ட் போட்டியில்

# 5 விக்கெட் இழப்புக்கு இந்தியா 310 ஓட்டங்கள்


பர்மிங்காம், ஜூலை 04

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 85 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 310 ஓட்டங்கள் சேர்த்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் லீட்ஸில் நடந்த முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையில் இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி பர்மிங்காமில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடி வரும் இந்திய அணி

85 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 310 ஓட்டங்கள் சேர்த்துள்ளது. அணித் தலைவர் சுப்மன் கில் 114 ஓட்டங்களுடனும் ரவீந்திர ஜடேஜா 41 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். இங்கிலாந்து தரப்பில் கிறிஸ் வோக்ஸ் 2 விக்கெட்களும், பென் ஸ்டோக்ஸ், பிரைடன் கார்ஸ், பஷீர் தலா ஒரு விக்கெட்டும் எடுத்தனர். (எ)



விம்பிள்டன் ரென்னிஸ்

# மூன்றாவது சுற்றில் அரினா சபலெங்கா

லண்டன், ஜூலை 04

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் அரினா சபலெங்கா 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஆண்டுதோறும் அவுஸ்திரேலிய ஓபின், பிரெஞ்ச் ஓபின், விம்பிள்டன், அமெரிக்க ஓபின் என 4 வகையான "கிராண்ட்ஸ்லாம்" என்ற உயரிய அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் போட்டி தொடர்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் மிகவும் கௌரமிக்கதும், முதன்மையானதுமான விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது.

இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் பெலாரஸின் முன்னணி வீராங்கனையான அரினா சபலெங்கா, செக் குடியரசின் மேரி பௌஸ்கோவாவுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய அரினா சபலெங்கா 7-6 (7-4), 6-4 என்ற செற் கணக்கில் மேரி பௌஸ்கோவாவை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)


# சுப்மன் கில் சாதனை

பர்மிங்காம், ஜூலை 04

இங்கிலாந்து தொடரிலிருந்து இந்திய அணியின் டெஸ்ட் அணித் தலைவர் பொறுப்பை ஏற்றுள்ள சுப்மன் கில் முதல் இரு டெஸ்டிலும் சதம் விளாசியுள்ளார். இதன் மூலம் அணித் தலைவராக முதல் இரு டெஸ்டிலும் சதம் அடித்த 4ஆவது இந்தியர் என்ற சிறப்பை கில் பெற்றார். ஏற்கனவே விஜய் ஹசாரே, சுனில் கவாஸ்கர், விராட் கோலி ஆகிய இந்தியர்கள் இத்தகைய சாதனையை படைத்துள்ளனர்.

இங்கிலாந்து மண்ணில் அடுத்தடுத்து இரு டெஸ்ட்களில் சதம் அடித்த 2ஆவது இந்திய அணித் தலைவர் என்ற பெருமையையும் (முதலில் முகமது அசாருதீன்) கில் பெற்றார்.

ரோஹித் சர்மாவின் ஓய்வுக்கு பிறகு இந்திய டெஸ்ட் அணியின் தலைவர் பொறுப்பை ஏற்ற முதல் 2 டெஸ்ட் போட்டிகளிலேயே சதம் விளாசி அசத்திய இந்திய அணித் தலைவர் கில்லுக்கு பல்வேறு தரப்பினர் பாராட்டுக்களை தெரிவித்து வருகின்றனர். (எ)






# விம்பிள்டன் ரென்னிஸ் மேடிசன் கீஸ் வெற்றி

லண்டன், ஜூலை 04

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் மேடிசன் கீஸ் 3ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது.

இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான மேடிசன் கீஸ், செர்பியாவின் ஓல்கா டானிலோவிக் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே அபாரமாக செயல்பட்ட மேடிசன் கீஸ் 6-4, 6-2 என்ற நேர் செற் கணக்கில் ஓல்கா டானிலோவிக்கை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

# "பும்ரா இரண்டாவது போட்டியில் களமிறங்கியிருக்க வேண்டும்"




பர்மிங்காம், ஜூலை 04

இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் பும்ராவுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

ஜஸ்பிரித் பும்ரா, சாய் சுதர்சன் ஆகியோர் இரண்டாவது டெஸ்ட் போட்டி அணியில் இடம் பெறாதது குறித்து இந்திய அணியின் முன்னாள் தலைமை பயிற்சியாளர் ரவி சாஸ்திரி விமர்சனம் செய்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது, இந்திய அணியின் தெரிவு ஆச்சரியமாக இருக்கிறது. இது மிக முக்கியமான போட்டி. ஒரு வாரத்துக்கும் மேலாக ஓய்வெடுத்துவிட்டு இந்தப் போட்டிக்கு வருகிறீர்கள். ஆனால், அணியில் பும்ரா இல்லை. இதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

போட்டியில் ஒரு வீரர் ஆட வேண்டுமா? இல்லையா? என்பதை அணித் தலைவரும் பயிற்சியாளர்களும் மட்டும் தான் முடிவு செய்ய வேண்டும். இது முக்கியமான போட்டி. முதல் போட்டியில் இந்திய அணி தோற்றிருக்கிறது. இந்தப் போட்டியில் இந்திய அணி பதிலடி கொடுக்கவேண்டும். அப்படியிருக்க பும்ரா இந்தப் போட்டியில் களமிறங்கியிருக்க வேண்டும்.

லோர்ட்ஸ் போட்டியை பிறகு பார்த்துக் கொள்ளலாம். முதலில் இந்தப் போட்டியில் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். சாய் சுதர்சனும் இல்லை. அவர் முதல் போட்டியில் நன்றாகத்தான் ஆடியிருந்தார். அவரை நிறுத்தியது மிகவும் தவறான முடிவு. குல்தீப் யாதவும் அவருடைய வாய்ப்புக்காக இன்னும் காத்திருக்க வேண்டிய சூழலே நிலவுகிறது- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி....

அவர், "கிருஷாந்தி குமாரசாமியின் படுகொலை விடயத்தில் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்பட்டதுபோல் செம்மணி மனிதப் புதைகுழிக்கு காரணமானவர்களை கண்டறிய சர்வதேசம் நடவடிக்கை எடுக்க வேண்டும்", என்றும் கூறியுள்ளார்.

"உண்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை வழங்குவதற்கு இங்கிலாந்து அரசாங்கம் முன்னணியில் இருக்க வேண்டும்", என்று வலியுறுத்தியுள்ள அவர், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானம் எதிர்கால போர் குற்ற விசாரணைகளில் பயன்படுத்தக்கூடிய ஆதாரங்களை சேகரிக்க, ஒருங்கிணைக்க, பகுப்பாய்வு செய்ய மற்றும் பாதுகாக்க மனித உரிமைகளுக்கான ஆணையாளர் பணிமனையின் திறனை வலுப்படுத்த வேண்டும். நீதியின் முன் நிறுத்தப்படுவதற்கு, மனிதப் புதைகுழியில் சேகரிக்கப்பட்ட சான்றுகள் தீர்மானம் 46/1இன் படி விவாதிக்கப்பட வேண்டும் என்பதை மனித உரிமைகள் பேரவை உறுதி செய்ய வேண்டும். ஐ. நா. தான் வைத்திருக்கும் ஆணையைப் பின்பற்ற வேண்டிய நேரம் இது" - என்றும் மெக்டோனா எம். பி. தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## மேலும்...

நாளாக நேற்றும் அகழ்வு பணி யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ. ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதே, சிறார்கள் இருவரின் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. இவை, செய்மதி தொழில்நுட்பம் மூலமாக அடையாளப்படுத்தப்பட்ட - மயானத்தில் வெவ்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வைத் தொடர்ந்து அகழப்பட்ட இடங்களிலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், மேலும் 4 மண்டையோடுகள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு மண்டையோடு நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டது.

மேலும், நேற்றைய அகழ்வில் சேலை என்று சந்தேகிக்கப்படும் உடை ஒன்றும் வெளிப்பட்டது. எனினும், அது முழுமையாக அகழப்படவில்லை.

இதனிடையே, நேற்று வரை 34 மனித எலும்புக்கூடுகள் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் யாழ். பல்கலைக்கழக தடயவியல் மற்றும் மானிடவியல் பிரிவில் வைக்கப்பட்டுள்ளன என்று சட்டத்தரணி நிரஞ்சன் தெரிவித்தார். (ஐ)

## பயங்கரவாத...

தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நாட்டில் இல்லாது செய்வதே தமது அரசியல் ரீதியான கொள்கையாக ஆரம்ப காலத்தில் இருந்து காணப்படுகிறது. தற்போது நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள தேசிய மக்கள் சக்தி பொதுத் தேர்தலின் போதும், ஜனாதிபதித் தேர்தலின் போதும் இதற்கான வாக்குறுதிகளை வழங்கியிருந்தமையையும் அமைச்சர் இதன்போது நினைவுபடுத்தினார்.

ஜனாதிபதியும் இந்தவிடயம் தொடர்பில் அதிக அக்கறை செலுத்துவதுடன் நீதி அமைச்சரும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பில், ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கு ஏற்கனவே குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதற்கான புதிய சட்டங்களை வகுப்பதற்கும், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயல்பட்டு வருகிறது - என்றும் கூறினார். (ஐ)

## தமிழ்....

துஷ்பிரயோகத்தில் ஈடுபடுவோருக்கு அரசியல் பாதுகாப்பு வழங்காதே", என்ற கோஷத்துடன் முன்னெடுக்கப் பட்டது.

பம்பலப்பிட்டியில் பிரபல பாடசாலையில் கல்விகற்ற குறித்த மாணவி கடந்த மே மாதம் கொட்டாஞ்சேனையில் தான் வசித்து வந்த தொடர் மாடி வீட்டிலிருந்து குதித்து உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காரைநகர்...

வேளை விபத்து இடம்பெற்றது. இதில் படுகாயமடைந்த அவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க் கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்று வியாழக்கிழமை நள்ளிரவு உயிரிழந்தார்.

இளைஞரின் மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வின்சன் அன்ரலா மேற்கொண்டார். (ஐ)

## சட்டம்....

துப்பாக்கிச் சூட்டில் உயிரொன்று பலியானது. நாட்டில் சிறிது காலமாகவே தொடர்ச்சியாக கொலைகள் நடந்து வருகின்றன. இது குறித்து கேள்வி எழுப்பி, அறிவுறுத்தல் விடுத்தும் இந்த விடயத்தில் அரசாங்கத்திடம் எந்த பதிலும் இல்லை. நாட்டில் சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றங்களை குறைப்பது எதிர்ப்பது குறித்து அரசாங்கத்துக்கு எந்த யோசனையும் இல்லை. சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும், பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் எந்த வேலைத்திட்டமோ அல்லது தொலைநோக்கு பார்வையோ இல்லாததோர் அரசாங்கமே இன்று நாட்டில் காணப்படுகின்றது. கொலைகள் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. பாதாள உலகக் கும்பல்கள், போதைப் பொருள் கடத்தல் கும்பல்கள், பல்வேறு அடக்குமுறை கும்பல்கள், அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டுவரும் கும்பல்கள் இந்த நாட்டில் தொடர்ந்து கொலைகளை செய்து வருகின்றன. வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்ய அரசாங்கம் தவறிவிட்டது.

தேசிய பாதுகாப்பு குறித்து ரியூசன் எடுப்போம் என வீராப்பு பேசிய அமைச்சர்களால் - தற்போது இயலாமைக்கு மத்தியில் இருந்து வரும் அரசாங்கத்தால் - நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய முடியாது போயுள்ளது. அரசாங்கம் மெத்தனப் போக்குக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது. இந்தப் படுகொலைகளும் துப்பாக்கிச் சூடுகளும் நிகழ்ந்து வரும் சந்தர்ப்பத்தில், இந்த சம்பவங்கள் தேசியப் பாதுகாப்பைப் பாதிக்காது என்று அரசாங்கம் தொடர்ந்து கூறி வருகிறது.

வீடுகளிலும், வீதிகளிலும், வேலைத் தளங்களிலும், நீதிமன்றத்தி லும்கூட துப்பாக்கிச் சூடு நடக்கும் நிலைக்கு நாடு வந்துள்ளது. இதைத் தடுக்க அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லாமையால் காட்டுச் சட்டமே கோலோச்சுகிறது. சட்டத்தின் ஆட்சி இல்லாது போய், கொலை செய்யும் கலாசாரம் பரவிக் காணப்படுகின்றது.

இன்று நாட்டு மக்கள் அச்சத்திலும் சந்தேகத்திலும் வாழ்ந்து வருகின்றனர். மிகுந்த அதிர்ச்சிக்கு மத்தியில் இருந்து வருகின்றனர். இந்தப் பிரச்னைகள் குறித்து அரசாங்கத்தால் எந்தத் தெளிவான நடவடிக்கைகளையும் எடுக்க முடியாது போயுள்ளது. ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசாங்கம் பலவீனமான அரசாங்கமாக காணப்படுகின்றது. தாம் வழங்கிய வாக்குறுதிகளைக்கூட மீறிய இந்த அரசாங்கத்தால் சட்டம் ஒழுங்கைக் கூட சரியாக பாதுகாக்க முடியாது போயுள் ளது. எனவே, தூங்கிக் கொண்டிருக்கா மல் சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

# வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த யாழ்ப்பாணத்தில் விசேட நடவடிக்கை!

## தென்னை பயிர் செய்கை சபை



யாழ்ப்பாணம், ஜூலை 04

"தென்னை பயிர்ச்செய்கையை பாதிக்கும் வெள்ளை ஈயின் தாக்கமானது அதிகரித்துள்ளது. அதனை கட்டுப்படுத்த இரண்டு வார வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். இதற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும்" என தென்னை பயிர்ச் செய்கை சபையின் வடக்கு மாகாண பணிப்பாளர் தேவராஜா வைகுந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று நல்லூரிலுள்ள அவரின் பணிமனையில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், "தென்னை உற்பத்தியில் வெள்ளை ஈயானது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் தென்னை வளர்ப்பாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். வேறு மாகாணங்களில் வெள்ளை ஈயின் தாக்கம் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டாலும் வடக்கு மாகாணத்தில் அதிலும், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அதன் தாக்கம் அதிகமாக காணப்படுகின்றது.

இந்த வெள்ளை ஈயை கட்டுப்படுத்துவதற்காக எதிர்வரும் 14ஆம் திகதியில் இருந்து இரண்டு வார வேலைத்திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்த உள்ளோம். அந்தவகையில் சாவகச்சேரி, உடுவில், கோப்பாய், நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற 5 பிரதேச செயலர் பிரிவுகளில் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். மேற்குறித்த 5 பிரதேச செயலர் பிரிவுகளிலும் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த ஐந்து பிரதேச செயல பிரிவுகளிலும் உள்ள அனைத்து தென்னை மரங்களுக்கும் வெள்ளை ஈயை கட்டுப்படுத்தும் திரவ கரைசலை விசிறவுள்ளோம். இதற்காக 200 விசிறும் இயந்திரங்களை பயன்படுத்தவுள்ளோம். ஒரு இயந்திரத்தால் ஒரு நாளைக்கு 90 மரங்களுக்கு கரைசலை விசிற முடியும். அதற்கு ஏற்ப திட்டமிட்டுள்ளோம்.

இதனை முன்னெடுப்பதற்கு எமக்கு ஆளணி பற்றாக்குறை, உணவுப் பிரச்னை, பணியில் ஈடுபடவுள்ளோருக்கான சம்பள கொடுப்பனவு பிரச்னை என பல்வேறு பிரச்னைகள் காணப்படுகின்றன. எனவே, இந்த பணியை தனியாக அரசாங்கமோ அல்லது அரசாங்க உத்தியோகத்தர்களோ செய்ய முடியாது. மக்களும் எங்களுடன் கை கோத்தால் மாத்திரமே இந்தப் பணிகளை முன்னெடுக்க முடியும்.

இந்த பணியில் பங்கெடுக்க விருப்புவோர் சுயாதீனமாக வந்து பிரதேசங்களை தாண்டியும் உங்களது பங்களிப்பை வழங்கலாம். அடுத்த வீட்டில் அல்லது அடுத்த பிரதேசத்தில் தானே வெள்ளை ஈயின் தாக்கம் உள்ளது, எமது பகுதியில் இல்லைத்தானே என்று எண்ணாதீர்கள். அது உங்களது பகுதியிலோ அல்லது உங்களது வீட்டிலோ உள்ள தென்னைகளையும் பாதிக்கலாம். எனவே இதனை ஒழிப்பதற்கு அனைவரும் முன்வரவேண்டும் - என்றார். (ஐ-5)

## செம்மணி படுகொலைகள்....

தொடர்பை பேணி, அவர்களின் குரல்கள் கேட்கப்படுவதை உறுதி செய்வதற்காகப் பாடுபடுகிறார்கள். மேலும், இந்தப் பிரச்னை குறித்து இலங்கை அரசாங்கத்திடம் நேரடியாக எழுப்பப்பட்டுள்ளது. குற்றவாளிகள் கணக்கில் கொண்டுவரப்படுவதை உறுதி செய்வதற்காக ஐ. நா. மனித உரிமைகள் பேரவை போன்ற சர்வதேச முயற்சிகளை நாங்கள் தொடர்ந்து வழிநடத்துகிறோம் - என்றும் கூறினார்.

யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய பின்னர் நீதிக்கு புறம்பான கொலைகள் செய்யப்பட்டன என்று கூறப்படுகிறது. மாணவி கிருஷாந்தி கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட வழக்கில் 1998ஆம் ஆண்டு விசாரணையின்போது தண்டனை பெற்ற லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் முதன்முதலில் அம்பலப்படுத்தினார். இதைத் தொடர்ந்து 1999ஆம் ஆண்டு அகழ் வின்போது 15 எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த அகழ்வு இடையில் கைவிடப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பில் இராணுவத்தின் எந்த மூத்த அதிகாரி மீதும் வழக்கு தொடரப்பட வில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மது...

போது இளைஞருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டது என்றும் இதையடுத்து அவரின் நண்பர்கள் அவரை உடனடியாக மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். எனினும், அவர் உயிரிழந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், இளைஞரின் மரணத்தையடுத்து அவரின் நண்பர்கள் சிலர் தலைமறைவாகியுள்ளனர். அவர்கள் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## வருடாந்தம்...

உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வருடாந்தம் மஹரகம தேசிய வைத்தியசாலையில் 11 ஆயிரம் புற்றுநோயாளர்கள் சிகிச்சை பெறுகின்றனர். புற்றுநோய் சிகிச்சைக்கான உபகரணங்களை மருத்துவ மனைகளுக்கு தொடர்ச்சியாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது - என்றும் அவர் சொன்னார். (ஐ)

## ஊடகவியலாளர்...

தமிழீழ வானொலி ஆகியவற்றின் அலுவலக செய்தியாளராகவும் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளுக்கு குரல் கொடுப்பவராகவும் அவர் பணியாற்றி னார். எறிகணை வீச்சுகள், விமான குண்டுவீச்சுகள், போர் நடவடிக்கைகள் என்பவற்றுக்கு மத்தியில் பல நெருக் கடிகளையும் எதிர்கொண்டு அவர் பணியாற்றியிருந்தமை நினைவில் கொள்ளத்தக்கது.

2010ஆம் ஆண்டின் பின்னர் யாழ்ப்பாணம், கொழும்பை தளமாகக் கொண்டு வெளியாகும் நாளிதழ்களின் கிளிநொச்சி செய்தியாளராக அவர் செயல்பட்டிருந்தார். நீண்டகாலமாக சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர் நேற்று வியாழக்கிழமை காலமானார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# எரிபொருள்கள் விலை உயர்வு நியாயமானதா?

## சமிந்த விஜேசிறி எம்.பி. கேள்வி



கொழும்பு, ஜுலை 04

எரிபொருள் விலை உயர்வு நியாயமானதா என நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி கேள்வி எழுப்பியுள்ளார்.கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசாங்கம் தொடர்பில் மக்கள் வைத்த நம்பிக்கைகள் நிறைவேற்றப் படாத நிலையே காணப்படுகின் றது. எரிபொருள் விலை இப்போது அதிகமாக உள்ளது, எனவே எரி பொருள் விலை உயர்வு நியாயமா னதா என அரசாங்கத்திடம் வினவ விரும்புகின்றோம்.

இந்த விலை உயர்வு தொடர்பில் வினவினால் முட்டாள் அரசியல் வாதிகள் பல்வேறு கதைகளை கூறுகின்றனர்.இரண்டரை மாதங்களுக்கு எண்ணெய் இருக்கிறது என்று சொல்கின்றனர். அதிக விலைக்கு எரிபொருளை விற்பது பொருளாதாரக் கொலையாகும்.

முன்னர் பல விடயங்களை அரசாங்க தரப்பினர் கூறினர். ஆனால் அந்த விடயங்களை அவர்களால் சாத்தியமாக்க முடியவில்லை.

ஆகவே மக்களும் கூட அவர்களுடைய இயலா மையை புரிந்து கொண்டுள்ளனர் ஆகவே அரசாங்கம் தற்போது பொய்யுரைத்துக்கொண்டுள்ளது. ஆகவே இந்த பொய்களை நிறுத் துமாறு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். ஒரு பொய்யை மறைக்க இன்னொரு பொய்யை சொல்லும் அரசாங்கமாக இந்த அரசாங்கம் மாறியுள்ளது. விவசாயத்துறை பிரதி அமைச்சரை தற்போது காண்பதற்கு கிடைப்ப தில்லை. அவர் முன்னர் நெல்லுக்கு நிர்ணய விலையை வழங்குமாறு கூற விவசாயிகளுடன் இணைந்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டார். ஆனால் தற்போது பழைய விலை யிலேயே கொள்வனவு இடம் பெறுகின்றது. இது விவசாயிக ளுக்கு இழைக்கப்பட் டுள்ள அநீதி இல்லையா?-என்றார்.

(அ)

## இந்தியாவில் கைது செய்யப்பட்ட 3 இலங்கையர்கள் நாடு கடத்தல்

கொழும்பு, ஜுலை 04

இலங்கையில் பல்வேறு குற்றங்களுக்காகத் தேடப்ப டும் நிலையில், இந்தியாவில் கைது செய்யப்பட்ட மூவர் நாடு கடத்தப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

அவர்கள் நேற்று முன் தினம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்து வரப்படுவார்கள் என்று தெரி விக்கப்பட்டிருந்தது. எனினும், எவரும் நேற்று முன் தினம் அழைத்து வரப்படவில்லை என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதேநேரம், குறித்த மூவரும் எப்போது இந்தியா வுக்கு சென்றவர்கள் என்ற தகவல் வெளியாகவில்லை.

முன்னதாக கடந்த வாரமும் இரண்டு சிங்களவர்கள் மற்றும் ஒரு தமிழர் ஆகியோர், தமிழகம் தனுஸ்கோடி கரைக்குப் படகு மூலம் சென்றபோது கைது செய்யப் பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## சிறந்த உணவுப் பட்டியலில் இலங்கைக்கு 69ஆவது இடம்

கொழும்பு, ஜுலை 04

உலகில் சிறந்த உணவு, சிறந்த உணவு கொண்ட நாடுகள் மற்றும் நகரங்களின் பட்டியலை, தனியார் பயண வழிகாட்டி நிறுவனமான 'டேஸ்ட் அட்லஸ்' வெளியிட்டுள்ளது.



100 நாடுகள் உள்ளடங்கிய இந்த பட்டியலில், 4.6 புள்ளிகளுடன் கிரீஸ் முதலிடத்தில் உள்ளது. இலங்கைக்கு 69ஆவது இடத்தில் உள்ளது.

இத்தாலி, மெக்சிக்கோ, ஸ்பெயின், போர்த்துக்கல் ஆகிய நாடுகள் அடுத்த நான்கு இடங்களைப் பிடித்துள்ளன. துருக்கி, இந்தோனேசியா, பிரான்ஸ், ஜப்பான், சீனா ஆகிய நாடுகள் 6 முதல் 10 வரையிலான இடத்தை பிடித்துள்ளது.

போலந்து 11ஆவது இடத்தையும், 4.42 புள்ளிகளு டன் இந்தியா 12வது இடத்தையும், அமெரிக்கா 13ஆவது இடத்தையும், இலங்கை 69ஆவது இடத் தையும் பிடித்துள்ளது.

இந்தியாவின் சிறந்த உணவுகளாக ரொட்டி, நாண், சட்னி, பிரியாணி, பருப்பு, பட்டர் கோழி, தந்தூரி கோழி ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. (அ)

## 20 மில்லின் ரூபா மோசடியில் சிக்கிய முன்னாள் அமைச்சர்!

கொழும்பு, ஜுலை 04

மேல் மாகாணத்தில் சக்திவாய்ந்த முன்னாள் அமைச் சர் ஒருவர், 120 மில்லியன் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள ஆறு சொகுசு ஜீப்களை சட்டவிரோதமாக பதிவு செய்து விற்பனை செய்ததாகக் கூறப்படும் நிலையில், அவருக்கு எதிராக வலான ஊழல் தடுப்புப் பணிக்குழு விசாரணை களைத் தொடங்கியுள்ளது.

இந்தப் பெரிய அளவிலான மோசடியில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சரின் நெருங்கிய கூட்டாளிகள் பலர் அடுத்த சில நாட்களில் கைது செய்யப்பட உள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த முன்னாள் அமைச்சருக்குச் சொந்தமான சட்ட விரோத ஜீப்களை சட்டவிரோதமாக பதிவு செய்ததா கக் கூறப்படும் மோட்டார் பதிவுத் திணைக்களத்தில் உள்ள பல சக்திவாய்ந்த நபர்களும் கைது செய்யப்பட உள்ளனர்.

முன்னாள் அமைச்சரின் நெருங்கிய உதவியாளர் ஒருவர், இந்த முன்னாள் அமைச்சரால் விற்கப்பட்ட வான் மற்றும் ஒரு ஜீப்புடன் சமீபத்தில் வலான ஊழல் தடுப்புப் பணிக்குழுவால் கைது செய்யப்பட்டார்.

விசாரணைகளின்போது,

முன்னாள் அமைச்சரும் அவரது நெருங்கிய கூட்டா ளிகளும் இந்த வாகன மோச டியில் ஈடுபட்டமை தெரியவந்தது. (அ)

## ஆயிரம் கொள்கலன்கள் சோதனையின்றி விடுவிப்பு

கொழும்பு, ஜுலை04



சுங்கப் பரிசோத னையின்றி 323 கொள் கலன்கள் விடுவிக்கப்பட்ட சம்பவம் குறித்து விசாரிக்க ஜனாதி பதியால் நியமிக் கப்பட்ட குழு, இதற்கு முன்பு 14 சந் தர்ப்பங்களில் சுமார் 1000 கொள்கலன்கள் சுங்க பரி சோதனை யின்றி விடுவிக்கப்பட்டுள்ளதாகக் கண்ட றிந்துள்ளதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இந்தக் கொள்கலன் வெளியீடுகள் தேசிய பாதுகாப் புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியதா? அல்லது அரசாங் கத்துக்கு ஏதேனும் நிதி இழப்பை ஏற்படுத்தியதா? என் பதைத் தீர்மானிக்க தணிக்கை நடத்தப்பட வேண்டும் என்று குழு பரிந்துரைத்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதி லளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, தணிக்கைக்குப் பிறகு, இந்த விடயத்திற்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குழு பரிந்துரைத்துள்ளதாகக் கூறினார்.

ஐந்து அதிகாரிகளைக் கொண்ட இந்தக் குழு, ஜனா திபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நியமிக்கப்பட் டிருந்ததுடன், துணை திறைசேரி செயலாளர் ஏ.கே. செனவிரத்ன இதற்கு தலைமை தாங்கியிருந்தார். (அ)

## அரச ஊழியர்கள் ஓய்வூதியம் இந்த மாதம் முதல் அதிகரிப்பு

கொழும்பு, ஜுலை 04

வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஓய்வூதிய உயர்வு, இம்மாதம் முதல் வழங்கப்படும் என்று பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

இதனால், ஓய்வுபெற்ற 500,000 க்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் இந்த உயர்வான ஓய்வூதியத்துக்குத் தகுதியாளர்களாக இருக்கிறார்கள் என அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுகளுக்கு மத்தி யில் ஓய்வு பெற்ற அரச ஊழியர்களை ஆதரிப்பதற்கான அரசாங்கத்தின் பரந்த முயற்சியின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட் டிக்காட்டியுள்ளார். (அ)

## ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாகவில்லை ராஜித!

கொழும்பு, ஜுலை 04



அம்பாந்தோட்டை கிரிந்த கடற்றொழில் துறை முகத்தில் மணல் அகழ்வுத் திட்ட மோசடி தொடர்பில் நேற்று முன் தினம் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாகவில்லை.

உடல் நலக்குறைவு காரணமாகவே அவர் முன்னி லையாகவில்லை என்று அவரின் சட்டத்தரணி கடிதம் ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

இந்தநிலையில் அவர் ஆணைக்குழுவில் எப்போது முன்னிலையாவார் என்ற தகவல் வெளியாகவில்லை.

முறையான கொள்முதல் நடைமுறைகளைப் பின்பற்றாமல் அவர் கிரிந்த கடற்றொழில் துறைமுகத் தின் மணல் அகழ்வு திட்டத்தை கொரிய நிறுவனத்திற்கு வழங்கியதாகவே குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, இலங்கை அரசுக்கு பாரிய நிதி இழப்பு ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நேற்று முந்தினம் அவர் ஆணைக்குழுவில் முன்னி லையாகியிருந்தால் நீதிமன்ற சமர்ப்பிப்பு அடிப்படை யில் கைது செய்யப்படக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தன என்று ஆணைக்குழு தரப்புகள் தெரிவித்துள்ளன. (அ)

## புத்தளத்தில் கரையொதுங்கும் பிளாஸ்ரிக் மூலப்பொருட்கள்! சிறுவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜுலை 04

புத்தளம் - உடப்பு கிராம கரையோரப் பகுதியில் பிளாஸ்ரிக், பொலித்தீன் தயாரிப்பு மூலப்பொருட்கள் பெருமளவில் கரையொதுங்கியுள்ளன.

குறித்த பகுதி மீனவர்கள் நேற்று அதிகாலை கடற்க ரைக்குச் சென்றபோது அதிகாலை தொடக்கம் பிளாஸ் ரிக் மூலப்பொருட்கள் கரையொதுங்கிய வண்ணம் காணப்படுகின்றன என்று தெரிவித்தனர்.

தற்போது வீசும் தென்மேல் பருவக்காற்றின் வேகத் தில் குறித்த மூலப்பொருட்கள் கரையொதுங்குகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் மூலப்பொருட்கள் மணி போன்ற வெள்ளை நிற வடிவில் கரையோரத்தின் பல பகுதிகளில் ஒதுங்கிக் காணப்படுகின்றது.

இவை மனிதனுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியவை நச்சுப்பொருள்கள் என்றும் சிறுவர்கள் விளையாட்டாக இதனை எடுத்து பார்ப்பது ,விளையாடுவதற்காக எடுத் துச் செல்வது மிகவும் ஆபத்தானவை என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.